Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
பிரதான வீதி, பருத்தித்துறை
540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 21 (10.06.2004) வியாழக்கிழமை இதழ்:252

# 'மிக்' ரக போர் விமானம் வீழ்ந்து நொருங்கியது!







## நீர்கொழும்பில் நேற்றுச் சம்பவம்

(கொழும்பு)

**இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான மிக் - 27 ரக போர்விமானம் நேற்றுக்காலை பயிற்சியில் ஈடுபட்டபோது, விபத்துக்குள்ளாகி நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து நொருங்கியது.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து, விமானப்படையின் மிக் - 27 மற்றும் மிக் -23 ரக தரைத் தாக்குதல் ஜெட் விமானங்கள் நேற்றுக் காலை பயிற்சிக்காக புறப்பட்டன.

விமான நிலையத்திலிருந்து கிளம்பிய சற்றுநேரத்தில் மிக் - 27 ஜெட் விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் விமானத்தை தரையிறக்கப் போவதாகவும் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு விமானி அறிவித்தார்.

கட்டுநாயக்கா விமானநிலையத்தை நோக்கி மிக் - 27 விமானம் திரும்பிக்கொண்டிருந்தபோது - நேற்றுக்காலை 8.50 மணியளவில் விமானியின் கட்டுப்பாட்டை மீறியது.

ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது விமானம் கட்டுப்பாட்டை இழந்ததால் - விமானியான பிறைட் லெப்ரினன்ட் பூயனகுண திலக பரசூட் மூலம் குதித்தார்.

இதனையடுத்து ஜெட் விமானம் நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து மூன்று துண்டுகளாக உடைந்து நீரில் மூழ்கியது.

வால்பகுதி மட்டும் கடல் நீருக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஊடகவியலாளரின் வீடு கொழும்பில் தாக்கப்பட்டது!

(கொழும்பில்)

கொழும்பில் தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளரான மோகன் என்பவரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையில் வெளியான செய்திக் கட்டுரை ஒன்றுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர் நடேசனின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டத்தினை நடத்தியிருக்கும் வேளையில் இவ்வாறனதொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடேசன் கொலையைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் கொலையைக் கண்டித்து கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கோட்டை ரயில் நிலைய முன்றலில் நேற்றுப் பிற்பகல் 12.45 மணி முதல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ் அரசியல்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளகள் - இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொலைசெய்வது நிறுத்தப்படவேண்டும், நடேசனின் கொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டனைக்குப்படுத்தப்பட வேண்டும், ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும், ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவோர் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள் - இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய செயல்களுக்கு அரசு உடனடியாக சரியான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இடையூறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக பத்திரிகையாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இராணுவத்தினரும், பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் ஆர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடு தழுவிய கண்டனப் பேரணி 17 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை

வெள்ளிக்கிழமை குடாநாடு தழுவிய ரீதியில் இடம்பெறவிருந்த கண்டனப் பேரணியை எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தவேண்டும். இடம்பெயர்ந்தோர் சொந்த இடங் ... வுள்ளது.

மக்கள் மத்தியில் பேரணி தொடர்பான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், மக்கள் மத்தியில் பாரிய எழுச்சியை ஏற்படுத்துவதற்காகவுமே இந்தப் பேரணி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றையதினம் குடாநாட்டில் உள்ள அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது அன்றைய

# நடேசன் படுகொலையை கண்டித்து

## நேற்றிரவு கடும்மழை

யாழ்.மாவட்டத்திலும் வன்னியின் பல பாகங்களிலும் நேற்றிரவு கடும்

# கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் கொலையைக் கண்டித்து கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கோட்டை ரயில் நிலைய முன்றலில் நேற்றுப் பிற்பகல் 12.45 மணி முதல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ் அரசியல்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளகள் - இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொலைசெய்வது நிறுத்தப்படவேண்டும், நடேசனின் கொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும், ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும், ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவோர் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள் - இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய செயல்களுக்கு அரசு உடனடியாக சரியான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இடையூறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக பத்திரிகையாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இராணுவத்தினரும், பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் ஆர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ்

முகமாக நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டத்தினை நடத்தியிருக்கும் வேளையில் இவ்வாறனதொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடேசன் படுகொலையை கண்டித்து திருமலையில் நேற்று ஹர்த்தால்!



மூத்த பத்திரிகையாளர் நடேசன் படுகொலையைக் கண்டித்து நேற்று திருகோணமலை மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மக்கள் பொதுமன்றம் இதற்கான அழைப்பை விடுத்திருந்தது.

மூத்த பத்திரிகையாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் படுகொலை குறித்து துரிதமாக விசாரணை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுமே இந்த பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. திருகோணமலை மாவட்டத்தின் உள்ளூர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு கடும்மழை

யாழ்.மாவட்டத்திலும் வன்னியின் பல பாகங்களிலும் நேற்றிரவு கடும் மழை பெய்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பிற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு ஏழு மணியளவில் ஆரம்பமான இந்த மழை சுமார் இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடு தழுவிய கண்டனப் பேரணி 17 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை குடாநாடு தழுவிய ரீதியில் இடம்பெறவிருந்த கண்டனப் பேரணியை எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தவேண்டும்.

இடம்பெயர்ந்தோர் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவேண்டும்.

தமிழ்மக்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட படுகொலைகள் நிறுத்தப்படல்வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இப்பேரணி இடம்பெறவுள்ளது.

மக்கள் மத்தியில் பேரணி தொடர்பான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், மக்கள் மத்தியில் பாரிய எழுச்சியை ஏற்படுத்துவதற்காகவுமே இந்தப் பேரணி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றையதினம் குடாநாட்டில் உள்ள அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது அன்றைய பணிகளை இடைநிறுத்தி பேரணியில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், கல்வி நிறுவனங்களும் இப்பேரணிக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிக்களை சந்திக்க ஜனாதிபதி அழைப்பு!

தென்னிலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து பேச்சு நடத்துவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பு இன்றிரவு 8.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமளிதுமளியை அடுத்து தற்போது ஏற்பட்டுள்ள அரசின் ஸ்திரத்தன்மை குறித்து ஆராயப்படவுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றில் இடம்பெற்ற அமளிதுமளியை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சிக்கு 118 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்காக உருவாக்கப்பட்ட பொது எதிர்க்கட்சிகளின் பட்டியலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட அரசுக்கு எதிரான அரசியல் கட்சிகளும் இணைந்துள்ளன.

இதனால் அரசு நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விளக்குவார் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பின்போது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை அரசு

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

(சி/2489)

பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி பிரபாரெட்டியின்
மாணவி நடாத்தும்



## கலந்துரையாடல்

மேற்படி இக்கலந்துரையாடல் நிகழ்வானது, **திருமதி பிரபாரெட்டியிடம்** பயிற்சிபெற்று சான்றிதழ் பெற்ற மாணவர்களையும், அழகுக் கலைபற்றி அறிந்துகொள்ள ஆர்வமுளள மாணவர்களையும் கருத்தில்கொண்டு நடைபெறவுள்ளது.

இடம் :- யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபம்.
காலம் :- 13.06.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி

**ஆர்வமுள்ள அனைவரும் வருக.**
**அனுமதி இலவசம்.**

T.P. 024 - 4 - 589464
071 - 2346781
077 - 6209963

நிர்வாகம்.

(சி-2652)


## ஜேர்மன் பயிற்சியாளர் குழு யாழ்.குடாவிற்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜேர்மன் ஆசிய விளையாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்தது.

இவர்கள் மேசைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், போன்ற துறைகளில் மூன்றுநாள் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சிகளின் ஆரம்ப கட்ட நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்க செயலாளர் ஜெ.மோகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் டெவ்மர் டியுறிவ் ஏற்றினார். தொடர்ந்து தேசியக்கொடியினை விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ஈஸ்வரன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மேசைப்பந்தாட்டத் தலைவர் இராசதுரை, மாவட்ட துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் சண்முகலிங்கம், மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி றோகான் ராஜசிங்க, ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் பிலிப் லேடன், லேறினா கொன்றி ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் இந்தப் பயிற்சிமுகாமில் பங்குபற்றுகின்றனர்.

இவ்வாறான பயிற்சி வகுப்புக்கள இனிவரும் காலங்களில் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.







'பொது ஆட்சியியல்' நூல் அறிமுக விழாவில் நூலாசிரியர்கள், சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பேராசிரியர் ரவி மணிவாசகம் நூலை வெளியிட்டு வைப்பதையும், முதற்பிரதியை கலாநிதி பி.புஸ்பரட்ணம் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கவுணாவத்தை ஆலயத்தில் பலியிடல் வேள்வி சிறப்புற நடந்தது

கவுணாவத்தை ஆலயத்தின் வருடாந்த பலியிடல் வேள்வி நிகழ்வு இம்முறை ஆலயத்திலேயே இடம் பெற்றுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கவுணாவத்தை ஆலயத்தின் வருடாந்த பலியிடல் வேள்வி நிகழ்வுகள் கடந்த எட்டு வருடங்களாக ஆலயத்திற்கு வெளியில் உள்ள காணி ஒன்றிலேயே இடம்பெற்று வந்தன.

உயர் பாதுகதப்பு வலயத்தினுள் இவ்வாலயம் இருப்பதாலேயே வேள்வி நிகழ்வுகள் ஆலயத்திற்கு வெளியில் இடம்பெற்றுவந்தது.

எனினும் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் அனுமதி அளித்ததன் பயனாக ஆலயத்தினுள்ளேயே வேள்வி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. வருடம்தோறும் இடம்பெறுவது போல் இம்முறையும் ஆடு, சேவல் போன்றன பலியிடப்பட்டன.

பல நூற்றுக்கணக்கான ஆடுகளும் நூற்றுக்கும் அதிகமான சேவல்களும் பலியிடப்பட்டதுடன், மடைபரவி விசேட ஆராதனை வழிபாடுகளும் இடம்பெற்றது.

சிறந்தமுறையில் மின் ஒளியூட்டப்பட்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். ஆடு ஒன்று பலியிடப்படுவதற்கு ஐநூறு ரூபா வரையில் பணம் அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில் நேர்த்திக்கடன்கள் செய்வோர் எண்ணிக்கை இம்முறை அதிகமாக இருந்ததாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (94)

## அறிவித்தல்

### மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### மானிப்பாய்

### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 2004/06/12

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20. 02 இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக இக்கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறுமென யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் - 2004.06.12 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி
2. கூட்டம் நடைபெறும் இடங்கள் - விபரம் கீழ்வருமாறு

| தொ.இ | கி.இல | கி.பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 69 | மானிப்பாய் | சங்கத் தலைமைக்காரியாலயம். |
| 02. | 70 | மடத்தடி | சிவசக்தி சனசமூக நிலையம், சண்டிலிப்பாய். |
| 03. | 71 | சீரணி | பாரதி சனசமூக நிலையம், சண்டிலிப்பாய். |
| 04. | 72 | மாகியப்பிட்டி | ஸ்ரீஅம்பாள் சனசமூக நிலையம், மாகியப்பிட்டி. |
| 05. | 78 | நவாலி | மதியொலி சனசமூக நிலையம், நவாலி. |
| 06. | 79 | மில்லடி | சங்கத் தலைமைக்காரியாலயம், மானிப்பாய். |
| 07. | 80 | சுதுமலை | யுவசக்தி சன்சமூக நிலையம், சுதுமலை. |
| 08. | 81 | கூளாவடி | ஆதவன் முன்பள்ளி கூளாவடி, ஆணைக்கோட்டை. |
| 09. | 82 | ஆனைக்கோட்டை } | கலைஒளி சனசமூக நிலையம், ஆணைக்கோட்டை. |
| 10. | 82 B | காக்கைதீவு } | |

சி.இராசேந்திரம்,
கௌரவ செயலாளர்,
மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

பிரதான வீதி,
மானிப்பாய்.

(757)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பொதுசன நூலகம்
### தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ். பொதுசன நூலகத்திற்கு 01.09.2004 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணிநேரம் பாதுகாப்புச்சேவை வழங்கக்கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பகல் 3 பேரும், இரவு 3 பேரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவேண்டும். தெரிவுசெய்யப்படும் நிறுவனம் மாநகர சபையுடன் ஒப்பந்தம் செய்வதுடன், சித்திபெறும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யும்போது ரூபா 100,000/= பெறுமதியான பிணைமுறி ஒன்று வழங்கல் வேண்டும்.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணபிக்கலாம். விண்ணப்பப் படிவம் ரூபா 69 (வற்வரி உட்பட) ம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் ரூபா 500 ம் செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 25.06.2004 ம் திகதி பி.ப.2.00 மணிக்குமுன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் 28.06.2004 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல்வேண்டும். கேள்விகள் யாவும் 28.06.2004 ம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு திறக்கப்படும் அப்போது விரும்பிய விண்ணப்பக்காரர் சமுகமளிக்கலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
09.06.2004

(சி-2655)

## வீதிகளில் பழம்விற்றோர் அகற்றப்பட்டனர்!

யாழ.நகரப்பகுதிகளுக்கு அண்மையாகவுள்ள வீதிகளில் சட்டத்திற்கு முரணான வகையில் பழங்களை விற்பனைசெய்துகொண்டிருந்த வியாரிகளின் பழங்களையும், தளபாடங்களையும் யாழ்.மாநகரசபையினர் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ். பேருந்து நிலையத்தினை அண்டிய வீதிகளில் போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் பழவியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களிடமிருந்தே மாநகர சபை ஊழியர்கள் இப்பழங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தப் பழங்கள் அனைத்தும் யாழ்.மாநகர சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவை பாவனைக்கு உதவாத வகையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ்.மாநகர சபையின் இந்த வீதியோரக் கடைகள் மீதான நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறவிருப்பதாக சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜீன், ரம்பா, ஆனந்தராஜ்
நடித்த
அழமைச் சங்கிலி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
INTREPID
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த




காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி
(ரில்ஸ்)



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00
(சி-2622)

# முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அரசியல்வாதிகளின் அபிலாஷைகளே தடை

## மயோன் முஸ்தபா குற்றச்சாட்டு

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடுவதையே தமது நோக்கமாகக் கூறி வாக்குகளைப் பெற்றவர்கள், அதிகாரத்திற்கு வந்தவுடன் கடைப்பிடித்த சர்வாதிகாரம் மற்றும் சுய நலப் போக்குகளே முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு தடைக்கற்களாய் அமைந்ததாக ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

இதேவேளை - தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை நன்கு அறிந்து கொண்ட பின்னரும் கூட, வேறு வழியில்லாத நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தம்மை ஏமாற்றிய அமைப்பிற்கே தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டியதொரு நிர்ப்பந்தமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை துர்ப்பாக்கியமானது.

"வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலமும், புதிய அரசியல் கட்சியின் தேவையும்'' என்ற தொனிப்பொருளில் கல்முனை ம.ஃமூத் பாலிகா மகளிர் கல்லூரியில் பொறியியலாளர் எம்.ஐ.எம். லத்தீர் தலைமையில் நடைபெற்ற புத்திஜீவிகள் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

தேசியக் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் மூலம் சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பது சாத்தியமற்றதென்பதைத் தீர்க்கமாக உணர்ந்த வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சுமார் பதினேழு வருடங்களுக்கு முன்னர் தனித்துவமான அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு ஈற்றில் வெற்றியும் கண்டனர்.

ஆனால் தனித்துவமான அரசியல் கட்சியொன்றை அமைப்பதில் வெற்றிகண்ட அளவுக்கு அந்த அமைப்பினூடாக தமது குறிக்கோளை அடைவதில் வெற்றியடைய முடியாமலாகிவிட்டது. இது ஒரு கசப்பான வரலாற்று உண்மையாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## திருட்டில் ஈடுபட்ட இருவருக்கு வவுனியா நீதிமன்றம் சிறை

வவுனியாவில் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் மூன்று வீட்டுக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இரண்டு நபர்களுக்கு ஆறுமாத சிறைத்தண்டனை வழங்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, சந்தேக நபர்கள் ஏற்கனவே ஏழு மாதகாலம் சிறைத்தண்டனை அனுபவித்திருப்பதால் அதனையும் தண்டனைக் காலமாக எடுத்துக் கொள்ளுமாறும் நீதிவான் எம்.இளம்செழியனிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரையும் ஆறுமாத காலத்திற்கு சாதாரண சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜேர்மன் விளையாட்டு அபிவிருத்தி நிறுவன அதிகாரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விளையாட்டுப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வை தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த ஈஸ்வரன் தேசியக்கொடியேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## இடைக்கால நிர்வாகம் குறித்து அரசின் நிலைப்பாட்டை உடன் வெளியிட முடியாதாம்!

விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் குறித்து அரசு தனது நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் உடனடியாக வெளிபடுத்த வேண்டும் என விடுத்த கோரிக்கைக்கு அரசதரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகள் தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டை நடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் குறித்து உடனடியாக விவாதம் நடாத்தப்படவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலியே இரத்தினதேரர் கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கு அரச தரப்பில், இந்த விவாதம் உடனடியாக நடத்த முடியாது என்றும், அதற்குத் திகதி இல்லை எனவும் கூறப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனை குறித்து ஒருநாள் மட்டும் விவாதம் நடாத்த முடியாது என்றும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மூன்று தினங்கள் நடாத்தப்படவேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனை அரசதரப்பில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

## ஜே.வி.பியினரின் குற்றச்சாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவனின் கொலைக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பிருப்பதாக ஜே.வி.பி .குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திர ரந்தெனிய கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்த மாணவனின் கொலையை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக தெரவித்துள்ள ரவீந்திர ரந்தெனிய, இக்கொலை தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடிவடையாத நிலையில் இந்தக் கொலையின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியே இருப்பதாக ஜே.வி.பி தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருவது அர்த்தமற்றது.

புரட்சி என்ற பெயரில் அன்று பலரைக் கொலை செய்து நாட்டில் கொலைக் கலாச்சாரத்தை அறிமுகப் படுத்திய ஜே.வி.பியின் இந்தக் குற்றச்சாட்டு அநாகரிகமானது. இது அவர்களது காட்டு மிராண்டித்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

இதேவேளை - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நிலவும் பதற்றநிலை தணிந்து, 'அங்கு நிலைமை வழமைக்கு திரும்பும்வரையில், பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்துவது எனவும், பல்கலைக் கழகத்தை அதுவரையில் மூடுவது எனவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னர் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என இன் றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கல்வியமைச்சின் செயலாளர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக நிர்வாகக் குழு, பல்கலைக்கழக மாணவர்கள் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரிடையே இதுதொடர்பான விசேட கூட்டமொன்று நேற்று நடைபெற்றது.

## கலரியில் இருந்த பார்வையாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமளிதுமளியை அடுத்து பார்வையாளர்களும் கலரியில் இருந்த படப்பிடிப்பாளர்களும் பொது மக்களும் அங்கிருந்த பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

நாடாளுமன்ற அமர்வுகளை கலரியில் இருந்து பார்ப்பதற்காக பெருமளவு மாணவர்களும் செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் கூடியிருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பித்தவேளை அங்கு ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து படம் பிடிப்பதற்கு முற்பட்ட வேளை நாடாளுமன்றப் பொலிஸார் தடுத்ததுடன் அவர்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

## சிறைச்சாலையிலுள்ளோர் பராமரிப்புக்கு ஒரு மில்லியன் ரூபாவை அரசு செலவிடுகிறது

போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாவனை தொடர்பாக சிறைச் சாலைகளில் தடுத்து வைத்திருப் போரின் பராமரிப்புக்கென சுமார் 1 மில்லியன் ரூபா இலங்கை அரசாங் கத்துக்குச் செலவாவதாகப் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை தொடர்பில் 8,100 பேர் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட் டுள்ளதாகவும், இவர்களின் பராமரிப்புக்கென ஒருவருக்குத் தலா 140 ரூபா வீதம் செலவு செய்யப் பட்டு வருவதாகவும் இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதன்படி, மாதமொன்றுக்கு 3 கோடியே 40 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் அரசாங்கத்தால் இப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோர் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் உடன்படிக்கையில் இலங்கை அரசும் கைச்சாத்திடவுள்ளது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாடு செலவோரைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் உடன்படிக்கை ஒன்றில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தகவல வெளியிட்டுள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுககுத் துப்பிச் செல்லும் நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நாடுகளால் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடுவது இதுவே முதற்தடவை எனவும் தெரிய வருகின்றது.

வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துதல், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளில் பணம் வசூலித்தல் முதலான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களும் இந்த உடன்படிக்கையில் உள்ளடங்குவதாகவும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிக்கொடி போர் நிறுத்தத்தை மீறுகின்றனராம்!

### படைத்தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது தேசியக் கொடியை ஏற்றிவருவதன் மூலம், போர் நிறுத்த ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக மீறி வருவதாக படைத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இதுவரை 120 தடவை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தேசியக் கொடியை ஏற்றியுள்ளதாகவும், இது தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பலமுறை முறைப்பாடு செய்த போதிலும் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்கள் தவறிவிட்டதாகவும் படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை, வடக்கு - கிழக்கில் அனுஷ்ரிக்கப்பட்ட தமிழீழ மாணவர் எழுச்சி தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்தின் பல்வேறு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டமை தொடர்பாகவும் இராணுவத்தினர் தனது பலத்த கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

## ஐந்து மாவட்டங்களில் விளையாட்டு மைதானம்

தமிழீழ விளையாட்டுத்துறை ஐந்து மாவட்டங்களில் தடகள காற்பந்தாட்ட மைதானத்தை அமைத்து வருகின்றது.

ஒவ்வொரு மைதானமும் தலா ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பில் -கரடியனாறு, திருகோணமலை, சம்பூர், வவுனியாவில் கனகராயன்குளம், மன்னாரில் அடம்பன் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலேயே இந்த மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## வெண்புறா நிறுவனத்தின் ஆண்டு விழாவும் ஊனமுற்றோர் தின விழாவும்

(திருகோணமலை)

வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழாவும் ஊனமுற்றோர் நினைவு நிகழ்வும் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு வெண்புறா நிறுவனத்தின் பிரதேச தொடர்பகங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கண்ணிவெடி விழிப்புணர்வு வாரமாக கடைப்பிடிக்கப்படவுள்ளதாகவும் வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (17)

## மாணவிமீது சேட்டைபுரிந்த இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு!

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் மாணவி ஒருவர் தனியாக சென்று கொண்டிருந்தபோது அங்க சேட்டை புரிந்த இளைஞன் ஒருவரை வவுனியா நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், இந்த இளைஞன் மாணவி தனியாக சென்று கொண்டிருந்தபோது, தகாத சொற்பிரயோகங்களும் - அங்க சேட்டைகளும் புரிந்ததாகவும், பெண் கூச்சலிட்டபோது அருகிலிருந்த பொதுமக்கள் இளைஞனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவரை பாலியல் 22 ஆம் சட்டம் 1995 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டக்கோவையின் 345 ஆம் இலக்கப்பிரிவின் கீழ் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர், பெண் - பெண்ணின் தாயார் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பின்னர் சந்தேக நபரை விளக்கமறியலில் வைப்பதற்கு அனுரா தபுரம் சிறைச்சாலைக்கு அனுப்புமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குற்றம் நிரூபிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட நபர் ஐந்து வருட சிறைத் தண்டனையினை அனுபவிக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

# டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக அவுஸ்ரேலிய அணி இந்தியா வருகிறது!

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திற்குப் பிறகு தற்போது ஓய்விலிருந்து வருகிறது. ஜுலை மாதம் இலங்கையில் நடைபெறும் ஆசிய கோப்பைப் போட்டியில் ஆடுகிறது. அதைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் ஹொலந்தில் நடைபெறும் மூன்று நாடுகள் போட்டியில் பங்கேற்கிறது. அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளும் இதில் கலந்துகொள்கின்றன.

செப்ரெம்பர் மாதம் இந்திய அணி இங்கிலாந்து சென்று மூன்று ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது. அதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் பங்கேற்றபின்னர் நாடுதிரும்பும்.

உலக சம்பியனான அவுஸ்ரேலிய அணி ஒக்டோபர் மாதம் இந்தியா வருகிறது. இங்கிலாந்திலிருந்து திரும்பும் இந்திய அணியோடு அவுஸ்ரேலியாவும் வருகிறது.

நவம்பர் மாதம்வரை இந்தியாவில் அவுஸ்ரேலியா, சுற்றுப்பயணம் மேற்கொள்ளும். அந்த அணி நான்கு டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது.

டெஸ்ட் போட்டி இடம்பெறும் இடங்களும், திகதி விபரமும் இந்த மாதக்கடைசியில் அறிவிக்கப்படுமென்று இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணி இந்தியாவுடன் டெஸ்ட்டில் மட்டும்தான் விளையாடும். இரு அணிகளிடையே ஒருநாள் போட்டி நடைபெற வாய்ப்பில்லை. ஒருநாள் போட்டிக்காக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையுடன் இந்திய கிரிக்கெட் சபை பேசிவருகிறது.

அவுஸ்ரேலிய அணி கடைசியாக 2000 -2001 ஆம் ஆண்டு இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரை 1:2 என்ற [illegible]கல் இழந்தது. அந்த அணி இதுவரை



இந்தியாவில் டெஸ்ட் தொடரை வென்றது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலியா தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்ட பின்பு தென்னாபிரிக்க அணி இந்தியா வந்து ஒருநாள் போட்டியில் விளையாடும் என்றும் கிரிக்கெட் சபைச் செயலாளர் நாயர் தெரிவித்தார்.

# சிம்பாப்வே அணிக்குத் தடை ஹீத்ஸ்ரீக் வேண்டுகோள்!



சிம்பாப்வே கிரிக்கெட் சங்கத்தின் இனவெறிப் போக்குக் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை விசாரணை நடத்தும்வரை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து சிம்பாப்வே அணிக்கு தடைவிதிக்கப் படவேண்டும் என்று அணியில் இருந்து நீக்கப்பட்ட கப்டன் ஹீத்ஸ்ரீக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிம்பாப்வே கிரிக்கெட் சங்கம் வெள்ளை இன வீரர்களுக்கு எதிராக செயற்பட்டதால், தான் அணியிலிருந்து நீக்கப்பட்டதாக குறை கூறியுள்ள ஹீத்ஸ்ரீக், இதுகுறித்து கூறுகையில், 'சிம்பாப்வேயில் தற்போது நிலவும் கிரிக்கெட் சர்ச்சை நீங்கும்வரை பிற நாடுகள் சிம்பாப்வேயில் டெஸ்ட் அல்லது ஒருநாள் போட்டிகளில் விளையாடக் கூடாது. இதற்கு தீர்வு காண்பது என்பது சர்வதேச கிரிக்கெட் சபைக்கு கஷ்டமானதுதான். ஆனால், இருதரப்பினர் இடையேயும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட சர்வதேச கிரிக்கெட் சபை வலியுறுத்த வேண்டும். இந்த விஷயத்தை இப்படியே நீடிக்கவிட்டால் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது மிகவும் கடினமானதாகிவிடும் என்று கூறினார். இங்கிலாந்தில் உள்ள வார்விக்ஷையர் கிளப்பிற்கு விளையாட முடிவு செய்துள்ள ஸ்ரீக் சிம்பாப்வே அணிக்கு தடைவிதிக்கும் தனது கோரிக்கையானது கிரிக்கெட் அடிப்படையில் மட்டுமே தவிர அரசியல் காரணங்களுக்காக அல்ல என்று கூறினார்.

சிம்பாப்வே கிரிக்கெட் பிரச்சினை முடியும்வரை, கவுண்டி போட்டிகளில் விளையாடமுடிவு செய்துள்ள ஹீத்ஸ்ரீக் எங்கே தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வு முடிந்துவிட்டதோ என்ற பயத் திலும் இருக்கிறார். சர்வதேச கிரிக்கெட்சபை இந்த விடயத்தில் தலையிடாதவரை இந்தப் பிரச்சினை எப்படித் தீரப் போகிறது என்ற வருத் தம் ஸ்ரீக்கிடம் இருக்கிறது.




கலைமதி விளையாட்டுக்கழக இறுதிப்போட்டியில்

## அரையிறுதிப் போட்டிக்கு சென்.அன்ரனிஸ் கழகம் தெரிவு

கலைமதி விளையாட்டுக் கழகம் நடாத்தும், உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் பொம்மேஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, டையமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கி 5 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரன் யோகன் முதலாவது கோலை அடித்ததை அடுத்து, 13 ஆவது நிமிடத்தில் டையமன்ஸ் விளையாட்டுக் கழக வீரன் அரவிந்தன் தனது அணிக்காக ஒரு கோலை அடித்து சமன் செய்தார்.

இடைவேளையின் பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்கப்பட்ட போது 14 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதைமூலம் மேலும் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரனால் ஒரு கோலும் 20 ஆவது நிமிடத்தில் நேரில் உதைமூலம் கிடைத்த பந்தை சரியான முறையில் பயன்படுத்தி டையமன்ஸ் விளையாட்டுக் கழகமும் தமது கோல் கணக்கை சமன்செய்தன.

இரு அணிகளும் சம புள்ளிகளைப் பெற்றமையால் தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், டையமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 6 - 5 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இதற்கு பிரதம நடுவராக அருளானந்த சோதியும் உதவி நடுவர்களாக ந.கிருஷ்ணகுமார், எஸ்.கதிர்காமராஜா ஆகியோரும் கடமையாற்றினர். (12)

# லாராவின் அணித்தலைவர் பதவி இங்கிலாந்து தொடர் முடிவுசெய்யும்

கடுமையான உழைப்பு மட்டுமே, இழந்தபெருமையை மீண்டும் மீட்டுத்தரும் என்கிறார் மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் பிறையன் லாரா.கிரிக்கெட் என்றாலே மேற்கிந்தியத்தீவுகள் அணி என்றொரு பெயர் ஒருகாலத்தில் இருந்தது. இப்போது அவர்கள் நிலைமை மிக மிகப் பரிதாபம் 10 நாடுகள் கொண்ட டெஸ்ட் தர வரிசையில் எட்டாவது இடத்தில் இருக்கிறது. அந்த அணி. பங்களாதேஸுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:0 என்ற முனனிலையில் கைப்பற்றினாலும், அவ்வளவு சுலபமாக அவர்களால் வெல்ல முடியவில்லை.

முத்தரப்பு ஒருநாள் தொடர், 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர்களில் பங்கேற்பதற்



காக மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்த வாரம் இங்கிலாந்து செல்கிறது. இங்கிலாந்துஅணி சமீபகாலமாக மிகச்சிறப்பாக விளையாடுகிறது. ஆகவே இதுவும்கடினமான தொடர்தான்.

இதுபற்றி அணித்தலைவர் லாரா தெரிவிக்கையில் சிறந்த அணிகள் வெற்றிகளைக் குவிக்கின்றன. இப்போதைக்கு நாங்கள் சிறந்த அணி அல்ல. ஆரம்பம் முதல் கடும் சவால் தரத்தவறுவதே எங்களது பலவீனம். தவறுகளில் இருந்து எங்கள் வீரர்கள் பாடம் கற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதேபோல, ஒரு அணியின் வெற்றிக்கு, வீரர்களின் உடற் தகுதியும் முக்கியம். திறமையை விட, உடற் தகுதியே அதிகம் தேவை என்றே கருதுகின்றேன். இங்கிலாந்து தொடரில் சிறப்பாக விளையாடி, இழந்த பெயரைத் திரும்பப் பெறமுயற்சிப்போம், என்கிறார். ஒருவேளை இங்கிலாந்துத் தொடரில் எதிர்மறை முடிவுகள் கிடைக்கும் பட்சத்தில், லாராவின் பதவி பறிக்கப்படலாம் என்று பேச்சு அடிபடுவதால், அவர் அதிக கவலையில் இருக்கிறார்.

# அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடர் மிகவும் கடினமானதாக இருக்கும்!

## பாலாஜி பேட்டியில் தெரிவிப்பு

எதிர்வரும் காலத்தில் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பலம்பெற வேண்டும் என்பதே தன்னுடைய தனிப்பட்ட குறிக்கோள் என்று, இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சில் புதிய புயலாக உருவெடுத்திருக்கும் எல்.பாலாஜி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட்டின் முன்னணி வேகப் பந்து வீச்சாளருக்கான 5 நாள் உடற் தகுதிப் பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் பெங்களூரில் ஆரம்பமானது.

இந்தப் பயிற்சி முகாமில் இடைவேளையின்போது பேட்டியளித்த பாலாஜி கூறியதாவது -

இங்கிலாந்து அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான மைக் ஹென்ட்ரிக் பந்து வீச்சு தொடர்பாக எனக்கு வழங்கியுள்ள ஆலோசனைகள் மிகவும் உதவியாக அமைந்துள்ளன. அவரது ஆலோசனை சஹிர்கான், ஜவஹல் சிறிநாத் இருவரைப் போல பந்துவீச உதவியாக அமைந்துள்ளது என்று கூறினார்.

ஹென்ட்ரிக் வழங்கிய ஆலோசனைகள், பந்துவீச்சு ஸ்டைல், பந்துவீச்சு ரன் - அப், வேகத்தை நிதானமாக கூட்டுவது, துடுப்பாட்ட வீரர்களை பந்துகளுக்காக காத்திருக்க வைப்பது போன்ற விடயங்களில் தனக்கு உதவியாக இருந்ததாக பாலாஜி கூறினார்.

இதுகுறித்து அளித்த பேட்டியில் பாலாஜி கூறியதாவது, 'சஹிர்கான், ஜவஹல் ஸ்ரீநாத் இருவரும் என்ன செய்தார்களோ, அதையே நானும் செய்யப்போகிறேன். தற்போது நான் பந்துவீச்சில் கட்டுப்பாட்டுடன் பந்துவீசுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கப் போகிறேன். இதில் நிபுணத்துவம் பெற வேண்டும் என்பது எனது விருப்பம். எதிர்வரும் காலங்களில் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மிக வலிமை பெறவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட குறிக்கோள் என்று கூறினார்.

எதிர்வரும் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரானது மிகவும் முக்கியமான தொடர் என்றும், அதே சமயம் அணியில் உள்ள ஒவ்வொரு வீரருக்கும் இது மிகவும கடினமான தொடர் என்றும் பாலாஜி கூறினார்.



[illegible]துகுறித்து பால[illegible]ஜி கூறுகையில், 'கடந்த காலங்கள் இந்திய அணிக்கு சிறப்பாக இருந்தது. அதேபோல இந்தக் காலத்தையும் நாம் உருவாக்கவேண்டும். வரும் காலங்களில் இந்திய அணி நிறையப் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதற்கு முற்றிலும் தயாராக, நடைபெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சி முகாமை நல்லமுறையில் பயன்படுத்தப்போகிறேன். ஆசிய கோப்பை மற்றும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடருக்கு தயாராக வேண்டும் என்பதே எனது விரும்பம் என்றும் பாலாஜி தெரிவித்தார்.







யாழ். குடாநாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க வந்த ஜேர்மன் பயிற்றுவிப்பாளர்களை முதலாவது படத்திலும், பயிற்சிபெற வந்த மாணவர்களை இரண்டாவது படத்திலும், வீரர்களுக்கு ஜேர்மன் பயிற்சியாளர்கள் பயிற்சி வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# இடைக்கால நிர்வாகம் எமக்குக் கிடைத்தால் புனரமைப்பு பணிகளை இலகுவில் மேற்கொள்ளலாம்



## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(பருத்தித்துறை)

இடைக்கால நிர்வாகம் தமிழர்களுக்கு கிடைப்பதாக இருந்தால் புனரமைப்புப் பணியினை மேற்கொண்டு தமிழர் நிம்மதியாக வாழ வழியேற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தும்பளை தெற்குசனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவும், தமிழ் ஒலி மாணவர் மன்றத்தின் 13ஆவது ஆண்டு நிறைவும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

இத்தகைய ஆண்டு விழாவில் மாணவர் மன்றத்தின் கலை நிகழ்ச்சியிலும் கலந்துகொள்வதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கிராமத்தில் காணப்பட்ட பல குறைபாடுகளை போக்குவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன்.

இந்தக் கிராமத்தின் வீதிகள் தற்போது திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. இவற்றைத் திருத்தித் தருவதற்கு ஒழுங்குகளைச் செய்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் என்னிடம் கோரியுள்ளார்கள்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது நாடாளுமன்றத்தில் இருந்து வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி குறைவாகக் காணப்படுவதாலேயே புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு ஒதுக்கப்படும் நிதி 5 லட்சத்திற்கும் குறைவானதாகவே உள்ளது.

இதனைக் கொண்டு ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியில் புனரமைப்புப் பணிகளைச் செய்வது சிரமமானதாக காணப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழர்களுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டு ஒரு சுமுக நிலை வரும்போது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது இலகுவானதாக இருக்கும். இதன் மூலம் தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்க வழியேற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (12)

# ஆசிரியசேவையில் ஒப்பந்த அடிப்படையில் மீள நியமிக்கப்படுவோருக்கான நிபந்தனைகள்

## கல்வி அமைச்சு அனுப்பி வைப்பு!

அதிகஷ்ட, கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் 60 வயது பூர்த்தியாவதன் அடிப்படையில் ஓய்வுபெறும் ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தும்போது பின்வரும் நிபந்தனைகள் குறித்து கடைபிடிக்கப்பட வேண்டியவையை கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

உரிய ஆசிரியர் ஓய்வு பெறுவதனால் அந்த ஆசிரியரால் கற்பிக்கப்பட்ட பாடத்தை கற்பிப்பதற்கு அந்தப் பாடசாலையில் போதிய வேறு ஆசிரியர்கள் எவரும் இல்லாதிருக்கவேண்டும்.

இதன்படி எந்தச் சந்தர்ப்பத்திலாவது மேலதிக ஆசிரியர்கள் இருக்கும் சந்தர்ப்பம் ஒன்று காணப்படும் பட்சத்தில் 60 வயதுக்கு அப்பாலும் ஆசிரியர்களை மீண்டும் சேவையில் அமர்த்தக்கூடாது.

ஓய்வுபெறும் ஆசிரியர் 60 வயதுக்கு அப்பாலும் சேவையாற்றுவதற்கு இணங்கவேண்டும்.

அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாட சாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் 60 வயது பூர்த்தியா வதன் நிமித்தம் கல்வி ஆண்டில், இடைநடுவில் ஓய்வு பெறுவதனால் மாணவர்களின் கல்விக்கு ஏற்படும் தடையை தவிர்ப்பதற்காகவே கல்வி அமைச்சினால் இத்தகைய திட்டம் இந்த ஆண்டு கொண்டுவரப்பட்டுள் ளது. (122)



*நல்லூர் பிரதேச செயலக அனுசரனையுடன் மக்கள் நலன்புரிச் சங்கம் நடத்திய தையல் பயிற்சி நிறைவு நிகழ்வில் செயலாளர் உரையாற்றுவதை படத்தில் காணலம். (111)*

# விசேட தேவைக்குரியோருக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவும்

யாழ். மாவட்டத்தில் உள்ள விசேட தேவைக்குரியோருக்கு உதவ சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட தேவைக்குரியவர்களை மேன்மையடையச் செய்தல் தொடர்பான கூட்டத்தில் இதற்கான அனுமதியை சிறுவர் பாதுகாப்பு நிதியம் கோரியிருந்தது.

இதன்பிரகாரம் 18 வயதிற்கு குறைந்த அங்கவீனர்களுக்கு வேண்டிய கல்வி, சுகாதாரம் தொடர்பான வசதிகளைச் செய்து கொடுக்க அந்த அமைப்பு முன்வந்திருக்கிறது.

இது தொடர்பான அறிவித்தல் யாழ். செயலகத்தால் சமூக நலன் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும் சமூக நலன்புரி அமைச்சு மற்றும் யு.என்.எச்.சி.ஆர் ஆகியவையே யாழ். மாவட்டத்தில் உள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அங்கவீனமானவர்கள் மற்றும் பிறப்பிலேயே அங்கவீனமாகப் பிறந்தவர்கள் முதலானோருக்கு உதவிகளைப்புரிந்து வந்தது.

எனினும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இவ்வாறான விசேட தேவைக்குரியவர்களுக்கு உதவிபுரிய விருப்பம் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக சமூக நலன்புரி அமைச்சு அறிவித்தல் வழங்கியது. அவர்களது சேவைகள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.சிவசாமி தலைமையில் நடை பெற்றது. இதில் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள், சமூகசேவை உத்தியோ கத்தர்கள் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (ப)

### கணித, விஞ்ஞான வினாடி வினா போட்டிகள்

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டங்களில் வெற்றியீட்டிய பாடசாலைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (122)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம், வறுத்தலை விளான அ.மி.த.க. பாடசாலை, வட்டு. மேற்கு அ.மி.த.க. பாடசாலை, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம் ஏழாலை றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு1, வகுப்பு 2:1ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப் பப்படிவத்தினைக்வலயக்கல்வி அலு வலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்குமுன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### வருடாந்த மஹோற்சவம்

பொலிகண்டி கந்தவனம் அருள் மிகு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (07)

# கணினிப் பயிற்சி வகுப்பு 14 ஆம் திகதி ஆரம்பம்

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மனிதவள அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழான கணினிப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தோரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கே இந்தப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பிரதேச செயலர் பிரிவின் ஊடாக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இந்தவாரம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக பிரதேச அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் செ.குகதாசன், சி.பத்மராஜா, இ.பரமேஸ்வரநாதன், இ.தவகோபால், சி.செகராசசிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களூடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேச அபிவிருத்திக் குழுவின் போஷகர்களாக நல்லூர் பிரதேச செயலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் செயற்படுவர்.

இனிவருங்காலங்களில் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திட்டங்கள் இந்தப்பிரதேச அபிவிருத்திக் குழு ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எல)

# வடக்கு - கிழக்கில் 500 பாடசாலைகளில் 'பொப்லொப்' திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் 500 பாடசாலைகளில் "பொப்லொப்" திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்தார்.

ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே வாசிப்புத்திறன் பழக்கத்தையும், மொழி விருத்தியையும் ஏற்படுத்துவதற்காகவே இந்தத் திட்டம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் 75 பாடசாலைகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இந்தவருடம் மேலும் 425 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் கடந்த வருடம் பரீட்சார்த்தமாக 75 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டபோது சில பாடசாலைகளில் நூல்கள் பயன்படுத்தப்படாமல் அலுமாரியில் பூட்டி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தாத பாடசாலைகளிலிருந்து புத்தகங்கள் மீளப்பெற்று வேறு பாடசாலைகளுக்கு வழங்கப்படுமென மாகாணக் கல்விப்பணிப்பாளர் அறிவித்தார். (122)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : சே.கௌசி
முகவரி : வேலணை மேற்கு.

நான்காவது அகவையில்



பெயர் : ந. துதிபவான்
முகவரி : கரவெட்டி.

நான்காவது அகவையில்



பெயர் : சி. நிலோஜனா
முகவரி : வட்டுக்கோட்டை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# தொழிற்பயிற்சிகளை வழங்குவதே எமது பிரதான நோக்கம்



க.ஜோ.தனசிங்கம்

**யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூராக்கு முன்பாக அமைந்த பற்றிசியன் தொழில் பயிற்சி நிறுவனத்தின் பதிவாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் - க.ஜோ. தனசிங்கத்தை நிறுவனத்திலே சந்தித்து தொழில் மலருக்கான நேர்காணல் ஒன் றினை மேற்கொண்டபோது, எங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**



பற்றிசியன் தொழில் பயிற்சி நிறுவனம் 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது நிறுவனமானது Long அடிகளாரின் உருவாக்கங்களில் ஒன்றர்கும். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரின் உதவியுடனும், யாழ்.ஆயரின் வழி நடத்தலுடனும் உருவாக்கப்பட்டது.

இந்த நிறுவனத்திற்கு ஒரு நிர்வாகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, நிர்வாக்க் குழுவின் உதவியுடன் ஆயரின் மேற்பார்வையில் ஒரு பதிவாளர் நியமிக்கப்படுவார். அப்படியே என்னை பதிவாளராக நியமித்துள்ளார்கள்.

இந்த நிறுவனத்தின் முழுப் பொறுப்பையும் என்னிடம் தான் ஒப்படைத்துள்ளார்கள்.

நிறுவனத்தில் வேலை செய்கின்ற அனைவரினதும் சுயமுயற்சியாலே இந்த நிறுவனம் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

எமது நிறுவனம் இன்று இரண்டு பிரிவுகளாக செயற்பட்டு வருகின்றது. ஒன்று உயர் படிப்புக்காக இரண்டு தொழிற்துறை ஆகும். இதனுடைய முக்கிய நோக்கம் - பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகும். இவை தொழில் சம்பந்தமான சகல பயிற்சிகளையும் வழங்குகின்றது.

யாழ்ப்பாணத்தில் தொழில் பயிற்சியை வழங்கியும், இங்கேயே வேலை வாய்ப்பினையும் வழங்குகின்ற ஒரே நிறுவனம் இதுவாகும். கத்தோலிக்க நிறுவனம் என்றும் சொல்லலாம்.

எங்களுடைய நிறுவனத்துக்கு வெளி இடங்களிலிருந்து நிதி உதவியோ, வேறு உதவிகளோ பெறப்படவில்லை. நாங்களாகவே தொழில் பயிற்சிகென மாணவர்களுக்கு வழங்கி, அவர்களினூடே தொழிலினை மேற்கொண்டு எமது நிறுவனத்தினை வளர்த்து வருகின்றோம்.

தொழில் பயிற்சிகள் என்று சொல்லும்போது, கணினி, மோட்டார் மெக்கானிக்கல், வைண்டிங், வெல்டிங், ரைப்பிங், தச்சுத் தொழில் போன்ற பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். அவர்களிடம் இருந்து குறைந்த கட்டணம் அறவிடுகின்றோம்.

தொழில் பயிற்சியினைத் திறமையான முறையில் கற்றவர்களைக் கொண்டே தொழிலினை மேற்கொண்டு, அதிலிருந்து வரும் இலாபத்தில் வேலையாட்களுக்கு சம்பளமாகக் கொடுக்கின்றோம். இதில் என்ன பயன் ஏன்று சொல்வதென்றால், சேவை அடிப்படையிலே தான் இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது.

இலாப அடிப்படையில் இயங்கவில்லை. வேலையற்ற மாணவர்களுக்கு பயிற்சியை வழங்குவது எனக்குத் திருப்தியளிக்கின்றது. அத்தோடு, எமது நிறுவனத்தில் பயிற்சியினை மேற்கொண்டவர்களுக்கு வெளியிலேயும் வேலை வாய்ப்பு கிடைக்கின்றது.

வறிய மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றோம். அந்தந்த ஊர்க்கிராம சேவகர்கள்மூலம், உறுதிப்படுத்தப்பட்ட மாணவர்களை எடுத்து பயிற்சியினை வழங்குகின்றோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், தந்தையை இழந்தபிள்ளைகளுக்கு முன்னு ரிமை கொடுகின்றோம்.

எமது நிறுவனத்திற்கு இன்னுமொரு பெயர் உண்டு. அதாவது, **YOUTH EDUCATIONAL AND TRAINING CENTRE** ஆகும். எமது நிறுவனத்தில் கணினிப் பிரிவு 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் எமது நிறுவனத்தில்தான் கணினிக் கல்வி பயிற்சி நிறுவனம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை கணினித்துறையில் வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை. எமது நிறுவனத்தில் ஆணும், பெண்ணுமாக சேர்ந்து கணினித்துறையில் 50 மாணவர்கள் படிக்கின்றார்கள்.



தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில்தான் முழுக்கவனமும் செலுத்துகின்றோம். இலாப அடிப்படையில் செய்வதும் இல்லை. ஆனால், கூடுதலான வேலைகள் வருகின்றன. நான் முதலில் பொறியியலாளராக இருந்தபடியால், என்னை நிறையப் பேருக்குத் தெரியும். இதனால் நிறைய வேலைகள் தொடர்ந்து கிடைக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிவருகின்றோம். இதனால், பயிற்சிக்கென வருபவர்களிடம் ஆர்வம் கூடவாகவுள்ளது. ஆரம்ப காலங்களைவிட இன்று இந்த நிறு வனம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது என் பதை நினைக்கின்றபோது - எனது சேவை கள், கூடுதலாக அமைந்துள்ளது என்று சொலலி முடித்தார்.

**நேர்காணல் :- செல்வா**

# நேர்முகத் தேர்வு சில உபயோகமான தகவல்கள்



ஒரு வேலைக்கான நேர்முகத் தேர்வு என்பது உண்மையில் பேசுவதற்கு அல்லது எழுதுவதற்கு இலகுவானதாக இருந்தாலும், பரீட்சார்த்திகளினால் பயத்துடன் எதிர்பார்க்கப்படுவதும், மனதில் சிறு அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியதுமான ஒரு அனுபவம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால, நேர்முகத் தேர்வை தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் சமயோசிதத் திறமையுடனும் எதிர்கொள்ளுவதே வெற்றிக்கான வழி. அந்தவகையில் நீங்கள் முகங்கொடுக்க இருக்கும் இந்த நேர்முகத் தேர்வு, உங்களுக்கு முதலாவதாக இருக்கலாம், அல்லது இருபதாவதாக இருக்கலாம். ஆனால், அதற்கு நீங்கள் தயாரா? இல்லையெனில் இதோ உங்களுக்கு சில பயனுள்ள தகவல்கள்.

முதலாவதாக நீங்கள் செல்ல இருக்கும் நிறுவனத்தின் சரியான விலாசம், நேர்முகத் தேர்வுக்கான திகதி, நேரம் - போன்றவற்றை சரிபார்த்துக் கொள்ளுங்கள். தேர்வுக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட நிமிடமே கொண்டுசெல்ல வேண்டிய சான்றிதழ்கள், ஆவணங்களைச் சரிபார்த்து நிச்சயப்படுத்துங்கள். இறுதி நேரப் பதற்றத்தைத் தவிர்க்க இது உதவும். சான்றிதழ்கள் - மூலப் பிரதிகளை ஒரு பைலிலும் வைத்திருங்கள். சில சமயங்களில் தபால்மூலம் உங்களது சான்றிதழ்களை அனுப்பும்படி கேட்கப்பட்டிருந்தால், பிரதிகளையே அனுப்புங்கள். நேரடியாகச் செல்லும்போது மட்டுமே மூலப்பிரதிகளை கொண்டு செல்லுங்கள். நேர்முகத் தேர்வுச் சமயத்திலும் பிரதிகளையே கொடுங்கள். அவர்களாகக் கேட்டால் மாத்திரமே மூலப்பிரதிகளை ஒப்படையுங்கள். பின்னா் மறவாது அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக சான்றிதழ்களை வரிசைப்படுத்தும்பொழுது, முதலில் அண்மையில் பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள் எனத்தொடங்கி பாடசாலைய்யில் பெற்ற சான்றிதழ்கள் கடைசியாக வரும்படி அமையுங்கள். நீங்கள் பெற்ற பரிசுகளின் விபரங்கள், முன்னா் பார்த்த தொழிலின் அனுபவக் கடிதங்கள் போன்றவற்றையும் சேருங்கள். அத்துடன். உங்களுடைய சுயவிபரக் கோவையையும் எடுத்துச் செல்ல மறவாதீர்கள்.

நேர்முகத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கும் உடை - அழகாகவும், நேர்த்தியாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். ஆடம்பரமாக உங்களை வெளிப்படுத்துவதை தவிர்ப்பதன்மூலம் உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தமுடியும். சான்றிதழ்களை எடுத்துச் செல்வதற்காக சிறிய பை ஒன்றை தேர்ந்தெடுங்கள். இதன்மூலம், தேவையற்ற பொருட்களை நேர்முகத் தேர்வு அறைக்குள் எடுத்துச் செல்வதை தவிர்க்கமுடியும்.

நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய மிக முக்கியமான விடயம் - காலந்தவறாமை, குறித்த நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னராவது சென்றுவிடுங்கள். போக்குவரத்து பிரச்சினை அல்லது எதிர்பாராத போக்குவரத்து நெரிசல் உங்களை தாமதப்படுத்தி, நேர்முகத் தேர்வு இடத்துக்கு உரிய நேரத்துக்குச் செல்வதைத் தடுத்துவிடலாம்.

நீங்கள் நேர்முகத்தேர்வுக்கு உள்ளாக்கப்படும் பொழுது, தெளிவாகவும், குழப்பமில்லாமலும் பேசுங்கள். முன்னுக்குப் பின் முரணாகக் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேட்கப்பட்ட கேள்விக்கு மாத்திரமே பதில கூறுங்கள். மேலும், கேட்கப்படக்கூடிய கேள்விகள் பற்றியே முன்கூட்டி அறிவான விடைகளை தயார்படுத்த உதவும். இது நேர்முகத்தேர்வன்று, கேள்விக்கான விடைகளை நிதானமாகவும், அழுத்தமாகவும் கூறுவதற்கு இடமளிக்கும். உதாரணமாக - நீங்கள் விண்ணப்பித்துள்ள பதவி விபரங்கள், அதனுடைய சேவை அல்லது பொருள் பற்றிய விபரங்கள் போன்றவை.

அத்துடன், குறிப்பிட்ட வேலையை எதற்காகத் தேர்தெடுத்தீர்கள். என்ற பதிவையும் வைத்திருங்கள். ஏனெனில், சில தனியார் நிறுவனங்கள் தமது வேலையாட்களைப் பற்றி அதிக எதிர்பார்புக்களுடன் இருப்பார்கள். உங்களுக்குத் திறமை இருப்பினும் அந்த வேலை பற்றிய அலட்சியமான பதில் அவர்களை எதிர்மறையான முடிவுக்குக் கொண்டு செல்லக்கூடும்.

இறுதியாக, நீங்கள் நேர்முகத் தேர்வில் வெற்றிபெறத் தவறிவிட்டால், நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். உங்களுடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். முடியுமாயின், ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதனை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலையும் கிடைக்கும் என்பதில்லை. ஆனால், நிச்சயமாக அதிலிருந்து கற்றுக்கொள்ள நிறையவே உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். ☆

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 40/= | 50/= | 35/= | 40/= | 40/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 30/= | 40/= | 35/= | 20/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 75/= | 80/= | 70/= | 90/= | 80/= | 80/= | 90/ | 80/= |
| கத்தரிக்காய் | 50/= | 50/= | 45/= | 35/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| பாகற்காய் | 80/= | 80/= | 80/= | 80/= | 60/= | 70/= | 80/= | 80/= |
| கரட் | 80/= | 70/= | 90/= | 60/= | 90/= | 60/= | 80/= | 80/= |
| பீற்றூட் | 40/= | 40/= | 45/= | 30/= | 40/= | 30/= | 35/= | 40/= |
| முருங்கக்காய் | 150/= | 100/= | ◆ | 80/= | 100/= | 120/= | 120/= | 100/= |
| வெங்காயம் | 40/= | 50/= | 45/= | 45/= | 60/= | 50/= | 45/= | 50/= |
| பச்சை மிளகாய் | 40/= | 50/= | 40/= | 32/= | 60/= | 45/= | 35/= | 40/= |

# இலங்கையின் பங்குச்சந்தை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

பங்குச் சந்தையில் உறுப்புரிமையும், நிர்வாகமும், கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிட வேண்டிய தகைமைகள்.

01. முதலாம்தர பட்டியல் நிரை (பொதுக்கம்பனி)
    1. 75 மில்லியனுக்கு மேல் வழங்கிய மூலதனம் அல்லது சந்தைமூலதனம்.
    2. வழங்கிய மூலதனத்தில் 25%மானது பொது மக்களிடம் காணப்பட வேண்டும்.
    3. கம்பனி மூன்று ஆண்டுகள் திருப்திகரமான செயற்பாடு.
    4. ஆகக் குறைந்தது 300 பங்குதாரர்கள்.
    இவற்றின் நிபந்தனையில் 233 கம்பனிகள் நிரல் படுத்தப்பட்டுள்ளன.
02. இரண்டாம்தர பட்டியல் நிரை.
    1. 5 மில்லியன் ரூபா வழங்கிய அல்லது சந்தை மூலதனம்.
    2. வழங்கிய மூலதனத்தில் 10 வீதம் பொது மக்களிடம் காணப்படவேண்டும். தற்போது இதன்கீழ் நான்கு கம்பனிகள் நிரல்படுத்தப்பட்டுள்ளன.
03. OTC பட்டியல் நிரை.

இது பட்டியலிடப்படாத கம்பனிகளுக்கான பட்டியலாகும். இதன்மூலம் கம்பனிகள் தங்கள் பங்குகளைக் கைமாற்றம் செய்யலாம்.

### பங்குகள் கைமாற்றல் கிரயம்

பங்குச் சந்தையில் பங்குள் கைமாற்றும் போது, கொள்வனவாளரிடம் அறவிடப்படும் கட்டணம் பங்கு கைமாற்றல் கிரயம் ஆகும். பங்கு கைமாற்றக் கட்டணத்தின் அடிப்படையிலேயே கிரய வீதம் தீர்மானிக்கப்படும்.

1 மில்லியன் ரூபாவும் அதற்குக் குறைவான தொகைக்கும், கைமாற்றல்களுக்கும் 1.4 வீதம் கிரயம் அறவிடப்படும்.

1 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகைக்கு 1.15 வீதம் கிரயம் அறவிடப்படும்.

கிரய வீதம் தீர்மானிக்கும் முறைகீழே தரப்படுகின்றது-

☆ தரகர்களுக்கான தேறிய பெறுமதி
1 மில்லியன் ரூபாவுக்கு 1.15%
1 மில்லியன் மேற்பட்டால் 9%.

☆ பிணைகள் பரிமாற்றல் ஆணைக்குழு வரி.
1 மில்லியன் ரூபாவுக்கு 1%.
1 மில்லியன் மேற்பட்டால் 1%.

☆ பங்குச் சந்தைக் கட்டணம்.
1 மில்லியன் ரூபாவுக்கு 12%.
1 மில்லியன் மேற்பட்டால் 1%.

☆ மத்திய வைப்பு திட்ட கட்டணம்.
1 மில்லியன் ரூபாவுக்கு 03%.
1 மில்லியன் மேற்பட்டால் 05%.

1 மில்லியன் ரூபாவுக்கான மொத்தக் கிரயத்தொகை 1.4%
1 மில்லியன் மேற்பட்டதன் கிரயத் தொகை 1.15.

### பங்குச் சந்தையில் கைமாற்றப்படும் பிணைகள

1. சாதாரண பங்கு : கம்பனியின் உரிமைத்துவத்தைப் பிரதிநிதிப்படுத்தும் பங்கு.
2. முன்னுரிமைப்பங்கு : குறித்த பங்குலாப வீதம் பெறும் பங்குகள் ஆகும்.
3. பங்காணைப்பத்திரம் : எதிர்காலத்தில் குறித்த விலைக்கு, குறித்த கம்பனி பங்குகள் கொள்வனவு செய்து, கொள்வனவு செய்யும் உரிமை, உரிமையை வெளிப்படுத்தக்கூடிய ஆவணம்.
4. வாக்குரிமையற்ற பங்கு : வாக்குரிமை தவிர்ந்த சாதாரண பங்குகளுக்குரிய அனைத்து உரிமைகளும் உடைய பங்கு இதுவாகும்.
5. கம்பனித் தொகுதிக்கடன் : கம்பனிக் கடன் மூலதனத்தை திரட்டிக் கொள்வதற்காகப் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய பிணைகள் தொகுதிக் கடன்கள் எனப்படும்.

### 2002 ஆம் ஆண்டில் இலங்கைப் பங்குச்சந்தை

இந்தக்காலப்பகுதியில் இலங்கைப் பங்குச்சந்தை குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியை காட்டியது. குறிப்பாக மூன்றாம் காலாண்டுகளில் பிரதான சந்தை குறிகாட்டி உயர் விளைவைப் பதிவு செய்தது. உலகிலேயே குறிப பிடத்தக்க சந்தையாகவும் காணப்பட்டது. இதற்கான காரணங்கள் -

1. பலகம்பனிகள் பொதுமக்களுக்கு ஆரம்ப பங்கு வழங்கியமை.
2. இலங்கை ரெலிக்கொம்மின் 12 வீதம் பங்குகள் வழங்கப்பட்டமை.
3. சில கம்பனிகள் தொகுதிக்கடன், முறிகளை வழங்கியமை.

இத்துடன், பல புதிய கம்பனிகள் பட்டியல் இடப்பட்டதுடன், நிரல்படுத்தல் வகைகள் 17 இல் இருந்து 20 ஆக உயர்ந்தப்பட்டன.

### 2002 ஆம் ஆண்டு பங்குச்சந்தை அபிவிருத்திக்கான பிரதானமான காரணங்கள்

1. தேசிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் காணப்பட்டமை.
2. சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் காரணமாக சிறந்த எதிர்பார்ப்பு.
3. வெளிநாட்டு முதலீட்டாளரின் முக்கிய கொள்வனவு.
4. கம்பனி இலாபங்களில் காணப்பட்ட மேம்பாடு.
5. நிலையான வருமானப் பிணைகள். மீதான வட்டி வீதம் வீழ்ச்சி.

இருந்த போதும், 2003 ஆம் ஆண்டு சில முன்மொழிவுகள் பங்குச்சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தின. அவற்றில் வங்கிகள் உட்பட நிதி நிறுவனங்கள்மீது விதிக்கப்பட்ட வரி முக்கியமானது ஆகும். ☆

# மருத்துவக் குணங்கொண்ட பிரபல்யமான பாகற்காய்



நம் நாட்டில் பிரபல்யமான மரக்கறி வகைகளுள் பாகற்காயும் ஒன்றாகும். இது கொடி வகையைச் சேர்ந்த மரக்கறி ஆகும்.

சிறுபோகமாக சித்திரை, வைகாசி மாதங்களில் பாகற் காய் உற்பத்தி செய்வதற்கான உகந்த காலப்பகுதியாகும். அவ்வாறே, பெரும் போகமான ஐப்பசி, கார்த்திகை மார்தங்களும் இதனை உற்பத்தி செய்வதற்கான உகந்த காலப் பகுதியாகும்.

நோய்களைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு.

கடல் மட்டத்திலிருந்து 1200 மீற்றர் உயர்ந்த பிரதேசத்தில் பாகற்காய் உற்பத்தியை மேற்கொள்ளலாம். நீர் நன்றாக ஓடக்கூடியதும், காபனிக் உரம், அதிகமாக உள்ள மண் - பாகற்காய் உற்பத்திக்கு மிகவும் உகந்ததாகும். சாதாரணமாக ஹெக்டயர் நிலம் ஒன்றுக்கு நல்லதொரு பாகற்காய் உற்பத்திக்காக 6 கிலோ விதைகள் தேவைப்படுகின்றன.

மேலும், நம் நாட்டுக்கு உகந்த பாகற்காய் இரு வகைப்படும். ஒன்று மத்திய அளவான சாதாரண பச்சை நிறமான பாகற்காய். அதன் மேல் தோல் பல்லு போன்று கூரானதாக இருக்கும் இந்த வகையை m.c 43 எனவும் அழைப்பர். மற்றையது, திருநெல்வேலி வெள்ளை என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்தவகை சற்றுப் பெரிதாகவும் வெள்ளைப் பச்சைநிறம் கொண்டவையாகவும் காணப்படும். அதேநேரம் அதன் வெளிப்புறம் நீண்டு கான்கள் போல்று அமைந்திருக்கும்.

பாகற்காய்களை 1.5 மீற்றர்x1மீற்றர் இடைவெளி விட்டு விதைக்கவேண்டும். முதலில் மண்ணைப் புரட்டி மண் கட்டிகளை உடைத்து 20 சென்ரிமீற்றர் x 30 சென்ரிமீற்றர் ஆழத்திற்கு மண்ணை இலகுவாக்க வேண்டும். 30 சென்ரி மீற்றர் x 30 சென்ரிமீற்றர் x 30 சென்ரிமீற்றர் அளவுகளில் கிடங்குகளை சரியான இடைவெளிகளில் உருவாக்கி உக்கிய காபனிக் உரம் போட்டு, வெளிமண்ணை தயாரித்தல் வேண்டும்.

ஒரு கிடங்குக்குள் 3 விதைகள் என்ற கணக்கில் 2 சென்ரிமீற்றர் x 3 சென்ரிமீற்றர் சாதாரண இடைவெளி விட்டு ஆழத்தில் விதைகளைப் புதைக்கவேண்டும். இந்த விதைகளைப் பயிரிட முன்பு ஒருநாள் நீரில் ஊற விடுவதால், விதைகள் முளைக்கும் செயற்பாடு விரைவாக நடைபெறும். விதைகள் முளைத்து இரு வாரத்தின் பின்பு ஒரு கிடங்கிற்குள் இரு கன்றுகளைவிட்டு வளர்ச்சியடையாத மற்றைய கன்றுகளைப் பிடுங்கிவிடவேண்டும்.

விதைகள் பயிரிட்டு 21 நாள் சென்ற பிறகு இரண்டு மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்ட பந்தலில் கொடியை ஓடவிட வேண்டும். விதைகளை பயிரிட முன்பு கிடங்குகளைத் தயாரித்த பின்பு காபனிக் உரத்துக்கு மேலதிகமாக இரசாயன உரத்தைக் கீழ் குறிப்பிட்டவாறு வழங்கலாம்.

ஒரு ஹெக்டயருக்கு பிரதான உரமாக 75 கிலோ கிராம் யூரியாவும், சுபர் பொஸ்பேட் 200 கிலோகிராமும், மியூரியெட் ஒசப்பொட்டேஸ் 60 கிலோகிராமும் போடவேண்டும்.

இரு வாரத்தின் பின்பு 75 கிலோ கிராம் யூரியாவும், 60 கிரோகிராம் மியூரியெட் ஓசப்பொட்டேஸ்சும் பாவிப்பது உயர்ந்த விளைச்சலைப் பெறுவதற்கு வழிவகுக்கும்.

விதைகள் முளைத்த பின்னர் தேவையான அளவு நீர் விநியோகம் மேற்கொள்ளல்வேண்டும். தேவைப்படும் ஈரத் தன்மையைவிட, மேலதிக நீர் சேருவது உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

### பாகற்காயைத் தாக்கும் நோய்கள்

பாகற்காய் வளர்ச்சியடையும் காலங்களில் பழங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும், ஈக்களினால் பாகற்காய் அழுகுவதற்கு இடமுண்டு. மற்றைய வகை செடிக்குள் இருந்து பாதிப்பை ஏற்படுத்துவது.

### நோய்களைத் தடுக்கும் முறை

பழங்களைப் பாதிக்கும் ஈக்களினால் அவற்றின் சிறு பராயத்திலேயே தடுக்க வேண்டும்.

செடி இருக்கும் இடங்களிலுள்ள நிலத்தை மண்வெட்டியினால் கிளரிவிடவேண்டும். அத்துடன், பாதிப்பு ஏற்பட்ட காய்களைப் பிடுங்கி எறியவேண்டும். சிறிய பொலித்தீனோ அல்லது கடதாசியோ உபயோகித்து காய்களை மறைத்துவிடவேண்டும் இந்தக் காய்களின் கீழ்ப்பக்கம் மறைக்கப்படாமல் திறந்திருக்கவேண்டும்.

இதற்காக கிருமிநாசினி பென்தியோன் 50 வீதம் e.c ஒரு ஹெக்டயருக்கு 1050 -1400 மில்லிலீற்றர் அளவு பூப்பூக்கும் காலத்திலிருந்து தெளிக்க வேண்டும். இந்தக் கலவைக்கு 50 கிராம் சீனி லீற்றர் ஒன்றுக்கு சேர்ப்பதால், அதிக பலனைப் பெறலாம். பென்தியோன் தெளித்து இரு வாரங்கள் கழிந்த பின்னரே விளைச்சலைப் பெறவேண்டும்.

பாகற்காய் செடிக்குள் இருந்து பாதிப்பை ஏற்படுத்தும் ஈக்களைத் தடுப்பதற்குக் கெப்பரில் 85 வீதம் கிருமிநாசினியில் 4.5 கிராம் தெளிக்கவேண்டும்.

இலைகளில் மஞ்சள் நிற புள்ளிகள் விழுந்து, பின்பு கோப்பி நிறமாக மாறி சாம்பல் - வெள்ளை நிறமான நுணணங்கிகள் இலைகளின் கீழ்ப்பகுதியில் உருவாகுவதைக் கீழ் பூஞ்சனம் பிடிக்கும் நோய் என அழைப்பர். பச்சை மற்றும் மஞசள் நிறமாக இலைகளில் ஏற்படும் இந்த வைரஸ இலைகளின் அழகைக் குறைத்துவிடும். செடியின் வளர்ச்சி குறையும்போது, இவற்றைப் பிடுங்கி நோய் பரவுவதைத் தடுக்க முடியும். அத்துடன், தகுந்த கிருமிநாசினி ஒன்றையும் உபயோகிக்க வேண்டும். விதைத்து 60 - 75 நாட்கள் சென்ற பின்பு, முதல் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். பின்னர் 4-5 நாட்களுக்குள் விளைச்சலைப் பெறலாம். ஹெக்டயர் ஒன்றில் இருபது தொன் பாகற்காய் உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

~ சசி சந்திரகாசன் ~

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| பெருந்தோட்ட அமைச்சு | விவசாயப் பொருளியலாளர் | விவசாயப் பொருளாதாரம்/ அபிவிருத்திப் பொருளாதாரத்தில் பட்டப்பின் படிப்பு.<br>5 வருட அனுபவம்<br>வயதெல்லை 60 வருடங்கள் | 15.06.2004 |
| யுனிசெப் | உதவி நிர்வாக நிதி அலுவலர் | வர்த்தக முகாமைத்துவ அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி.<br>2 வருட அனுபவம் | 19.06.2004 |
| இலங்கை வர்த்தகத் தொழில்துறை நிர்வாகங்கனின் இணையம் | 1. தகவல் தொடர்பு முகாமையாளர்<br>2. பிரதம நிறைவேற்று அலுவலர் | நூலகமாணிப் பட்டதாரி/ தகவல் தொடர்பு விஞ்ஞானம் 5 வருட அனுபவம்.<br>வர்த்தக / முகாமைத்துவம்/ பொருளியல் பட்டதாரி அல்லது அவைசார்ந்த துறைகள். 5 வருட அனுபவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். | 12.06.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

பொதுசன நூ
யாழ்ப்பாண



**நாடக ஆசிரியர், பாடநூல் எழுத்தாளர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலைப்பீடாதிபதி எனப் பல தளங்களில் பணிகளை ஆற்றியவர், ஆற்றிக்கொண்டிருப்பவர் கலாநிதி சி.மௌனகுரு பல நூல்களை எழுதியிருக்கும் இவர் - தனது எழுத்துக்காக மூன்றுமுறை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர். உலகத் தமிழ் இணைய இதழின் துவக்க விழாவில் கலந்துகொண்ட மௌனகுரு உடனான நேர்காணலின் சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.**

# எனக்குத் தெரியாமலே என்னுள் இருந்த கூத்தாடியை வெளிப்படுத்திக் கொண்டேன்



சி.மௌனகுரு

எங்களுடைய ஊர் ஒரு கிராமம். கூத்துக்குப் பெயர்போன ஒரு ஊர். நான்கைந்து வயதிலேயே கூத்துக்களைப் பாாத்த ஞாபகம் இருக்கிறது. அப்போதே கூத்துக்களைப் பார்ப்பதில் ஆர்வம் இருந்தது. அயலூரில் நடக்கும் கூத்தைப் பார்க்க அம்மாவும், பாட்டியும் என்னைக் கூட்டிக் கொண்டு போவார்கள். பாடசாலையில் சேர்ந்த பிறகு கூத்தே எனக்கு ஈடுபாடான துறையாக மாறியது.

எனக்குக் கூத்துப் பார்க்க அனுமதி கிடைத்ததேயொழிய, கூத்தை ஆடுவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. எனது பதினேழாவது வயதில்தான் பாடசாலைக்குள் கூத்தாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. கூத்தாடும் போதுதான் எனக்குத் தெரியாமல் எனக்குள்ளும் ஒரு நல்ல கூத்தாடி உள்ளான் என்பதை அறிந்தேன். மேலே மேலே கூத்தைப் பர்த்துப் பார்த்து, அந்தக் கூத்து எனக்குள்ளேயே சரளமான கலையாக மாறியதைப் பின்னால்தான் உணர்ந்தேன்.

பாடசாலையில் நாடகத்தைப் பழகிக்கொண்டிருந்தபோது, அண்ணாவியார் (கூத்துப் பழக்குபவர்) என்னுடைய ஆட்டத்தை இனங்கண்டு பாராட்டினார். அப்போது நடந்த கூத்தைப் பார்ப்பதற்கு வித்தியானந்தனும் பேராசிரியர் சிவத்தம்பியும் எங்கள் பாடசாலைக்கு வந்திருந்தார்கள். அந்தக் கூத்தால் கவரப்பட்டு, வித்தியானந்தனும், சிவத்தம்பியும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அந்தக் கூத்தை எடுத்துக்கொண்டு சென்றார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக திறந்தவெளி அரங்கில் நாங்கள் கூத்து ஆடியபோது, ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது. அந்த நாடகம் முடிந்த பின்பு பேராசிரியர்கள்ான சரத் சந்திரா, சிறிகுணசிங்கா, வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை போன்றோர் எங்களைக் கட்டித்தழுவி ஆசீர்வதித்ததைக் கண்டபோதுதான் இந்தக் கூத்தில் ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அதன் பின்னால் கூத்தைப் பல்வேறு தளங்களுக்கும் எடுத்துக்கொண்டு சென்றபோது, அது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றதையும், அது ஈழத் தமிழருடைய அடையாளமாய் பின்னால் கருதப்பட்டதையும் நாங்கள் எங்கள் வரலாற்றுப் போக்கில் உணர்ந்து கொண்டோம்.

பல்கலைக்கழகம் போகும் முன்பே பேராசிரியர் சிவத்தம்பியும், வித்தியானந்தனும் அறிமுகமாகியிருந்தார்கள். பல்கலைக்கழகம் போன பின்பு வித்தியானந்தன் என்னை அடையாளம் கண்டுகொண்டார்.

என்னை மட்டுமல்ல, கூத்தில் பாண்டித்தியம் கொண்ட பல மாணவர்களையும் இணைத்துக்கொண்டு கூத்துக்களை மேடையேற்றத் தொடங்கினார். பேராசிரியர் வித்யானந்தன் நான்கு நாடகங்களைத் தயாரித்தார். அதில் ஒன்று கர்ணன் போர் என்ற நாடகமாகும்.

அது மட்டக்களப்பின் வடமோடி முறையில் அமைந்த நாடகம். அந்தக் கர்ணன் போர் நாடகத்தைச் சுருக்கி எழுதும் பணி என்னிடம் தரப்பட்டது. நான் சுருக்கி எழுதினேன். அதற்கு மேடை வடிவம் கொடுத்தார்கள். அந்த நாடகத்தில் நான் கர்ணனாக நடித்தேன். அதன் பின்னால் தயாரித்த நாடகம்தான் நொண்டி நாடகம்.

1962 ஆம் ஆண்டு - கர்ணன் போர் நாடகமும், 1963 ஆம் ஆண்டு நொண்டி நாடகமும், 1965 ஆம் ஆண்டு இராவணேசுவரன் நாடகமும் மேடையேறியது. இராவணேசுவரனின் பிரதியை என்னுடைய 22 ஆவது வயதிலே எழுதினேன். பேராசிரியர் சிவத்தம்பி தான் அந்தப் பிரதியை எழுதுவதற்குப் பலவகையிலும் உதவி செய்தார். இராவணனாக நான் நடித்தேன். அது எனக்கு மிகுந்த வரவேற்பையும், புகழையும் பெற்றுத் தந்த நாடகம். என்னுடைய 22, 23 ஆவது வயதிலேயே இலங்கை முழுவதையும் அறியக் கூடிய பாக்கியம் கூத்து மூலமாகப் கிடைத்தது.

வடமோடி, தென்மோடி என்பது ஈழத்தில் எல்லா இடங்களிலும் இருக்கின்ற இரண்டு கூத்து மரபுகள். யாழ்ப்பாணம், மன்னார், முல் லைத் தீவு, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் கூத்து உள்ளது. வடமோடி, தென்மோடி வகைகளின் துல்லியமான பிரிவு நன்றாகத் தெரிகின்ற இடம் மட்டக்களப்புதான்.

இதனால்தான் மட்டக்களப்பு கூத்துக்களை வைத்துக்கொண்டு வடமோடி, தென்மோடி என்கின்ற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதில் இரண்டு விதமான அபிப்பிராயங்கள் உள்ளன. வட இந்தியாவிலிருந்து வந்தது வடமோடி. தென்னிந்தியாவிற்குரியது தென்மோடி என்கின்ற கருத்து இருந்து வருகிறது.

தமிழ்நாட்டுக்கு வடக்கேயுள்ள ஆந்திரா, கர்நாடகம் போன்ற பகுதிகளிலிருந்து வந்தது வடமோடி என்றும், தமிழ்நாட்டுக்குள்ளிருந்து வநத கூத்து தென்மோடி என்றும் சொல்பவர்களும் உண்டு. தமிழ்நாட்டிலுள்ள தெருக்கூத்து, பரதநாட்டியம் - தமிழ் நாட்டுக்கு வெளியே உள்ள யக்ஷகானம், கதகளி, பாகவதமேளா இவற்றின் தாக்கம் எல்லாம் வடமோடி, தென்மோடியில் தெரியும்.

இதில் துல்லியமான வேறுபாடு என்ன வென்று சொன்னால் - ஆட்டத்தில், பாடலில், உடையமைப்பில், கதைப்பொருளில் வடமோடிக்கும், தென்மோடிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆட்டம் என்று சொன்னால் ஒரு துள்ளலான மென்மையான ஆடடத்தையும், அதற்கான ஜதிகளையும் கொண்டிருப்பது தென்மோடி. வேகமான ஆட்டத்துடன் அதற்குரிய ஜதிகளுடன் இருப்பது வடமோடியாகும்.

> **ஆட்டத்தில், பாடலில், உடையமைப்பில், கதைப்பொருளில் வடமோடிக்கும், தென் மோடிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆட்டம் என்று சொன்னால் ஒரு துள்ளலான மென்மையான ஆட டத்தையும், அதற்கான ஜதிகளையும் கொண்டிருப்பது தென்மோடி. வேகமான ஆட்டத்துடன் அதற்குரிய ஜதிகளுடன் இருப்பது வடமோடியாகும்.**

பழைய உள்ளடக்கங்களுடன் புராண இதிகாசக் கதைகளை வைத்துக்கொண்டுதான் பேராசிரியர் வித்தியானந்தன் கூத்துக்களை மேடையேற்றினார். மட்டக்களப்பில் வட்ட மேடையில்தான் கூத்தாடுவார்கள். சுற்றியிருந்துதான் ஆட்கள் பார்ப்பார்கள். வித்தியானந்தன் - ப்ரோசீனியம் அரங்கைக் கொண்டு வந்தார். நவீன உடை அமைப்பு, ஒளி அமைப்புக்களைப் பாவித்தார். கிராமத்துப் பாடல் முறைகளைக் கொஞ்சம் செம்மைப்படுத்தி, மென்மையானதாக்கி, அழகாக மாற்றினார்.

என்னுடைய நாடகங்கள் சமூகப் பிரச்சினைகளைச் சொல்லக்கூடிய உள்ளடக்கம் கொண்டவையாக இருந் தன.

அந்த நாடகங்களில் ஒன்று சங்காரம் என்ற நாடகம். இது 1969 ஆம் ஆண்டு மேடையேறியது. இது மனுக்குலப் போராட்டத்தைச் சொல்லும் வகையில் அமைந்திருந்தது. அது ஈழத்து நாடக வரலாற்றிலே ஒரு மாற்றுக்காலம் என்று குறிப்பிடுவார்கள். அதன் பின்னால் நவீன நாடகத்தில் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு, எனது நவீன நாடகத்துக்குக் கூத்தின் சாரத்தைப் பயன்படுத்தினேன்.

ஈழத்தின் நவீன நாடக முன்னோடியாகக் கருதப்படுபவர் கலையரசு சொர்ணலிங்கம்பிள்ளை. பம்மல் சம்பந்த முதலியாருக்கு நிகரானவர் அவர். தமிழ்நாட்டில் பம்மல் சம்பந்த முதலியார் எப்படி நவீன நாடகங்களை பார்ஸித் தியேட்டருக்கு மாற்றாகப் போட ஆரம்பித்தாரோ, அதே போல ஈழத்தில் நவீன நாடகங்களைப் போடத் தொடங்கியவர் கலையரசு சொர்ணலிங்கம்பிள்ளை.

அவர் போட்ட எல்லா நாடகங்களுமே பம்மல் சம்பந்த முதலியாருடைய நாடகங்கள்தான். அதைத் தான் ஈழ நவீன நாடகத்தின் ஆரம்பப் புள்ளியாகக் குறிப்பிடுவார்கள்.

ஆனால், உண்மையில் நவீன நாடகம் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிலிருந்து ஆரம்பிக்கிறது. இவர் வசனத்தில் அமைந்த நாடகங்களை சாதாரண மக்களை, மத்தியதர மக்களைப் பாத்திரமாகக்கொண்டு நாடகங்களை எழுத ஆரம்பித்தார். தமிழ் நாடக வரலாற்றிலேயே இந்தியாவையும் சேர்த்து, முதன்முதலாகப் பேச்சுத் தமிழில் காத்திரமான நாடகம் எழுதியவராவார்.

நான் 1976 இல் யாழ்ப்பாணம் வந்தேன். 1983 ஆம் ஆண்டு மாபெரும் கலவரம் ஆரம்பமானது. கொழும்பிலிருந்து அடிபட்டு எல்லோரும் வடக்கு கிழக்குக்கு ஓடிவந்தார்கள். அப்போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். அதன் பின்னர் அரசியல் இயக்கங்கள் அங்கே ஆரம்பமாகத் தொடங்கின. ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பமாகி, ஈழத் தமிழரின் வரலாறு வேறு திசைக்குச் செல்லத் தொடங்குகின்றது.

அதற்குப் பின்பு யாழ்ப்பணத்தில் நாடகம் வகித்த இடம் வேறு. மக்களுடைய பிரச்சினையைச் சொல்வதாக, மக்களுக்கு அறிவூட்டுவதாக, வழிப்படுத்துவதாகப் பல்வேறு ரூபங்களில் நாடகம் உருப்பெறலாயிற்று.

சிதம்பரநாயகம் என்றொரு நாடக ஆசிரியர் இருந்தார். அவருடைய நாடகங்கள் எல்லாம் அகதி முகாமில் வாழ்கின்ற மக்களுக்கான துப்புரவு, படிப்பு தொடர்பானவையும், கசிப்பு போன்றவற்றுக்கு எதிரான நாடகங்களும் உண்டு.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்பு நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் ஒவ்வொரு பதுங்குகுழி வெட்டப்பட்டிருக்கும். வானத்தில் எந்தவொரு வானூர்தியைக் கண்டாலும் ஓடிப் போய் எல்லோரும் பதுங்குகுழிக்குள் புகுந்து விடுவார்கள். விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து விட்டுத் திரும்பிச் சென்றபின்தான் வெளியே வருவார்கள்.

நாங்கள் நாடகத்தை ஆரம்பிப் போம். சிலவேளை மக்கள் ஒன்று கூடும்போது விமானங்கள் வந்ததும் சிதறி ஓடி விடுவார்கள். இதனால் நாடகம் நடந்தேற முடியாத நிலை ஏற்படும்.

நாங்கள் உயிரோடு இருப்பதே மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம். ஏனெனில், பல குண்டுகளுக்குத் தப்பிப் பிழைத்திருக்கிறோம். ஷெல் - எங்களுக்கு முன்னாலும், பின்னாலும், பக்கத்திலும் விழுந்திருக்கிறது. நான் இருந்த வீட்டைச் சுற்றிலும் ஷெல் விழுந்து, துடிதுடித்துச் செத்தவர்களைக் கண்டிருக்கிறேன். இந்த அனுபவங்களை எல்லாம் பல பேர் வாழ்க்கையில் எதிர்கொண்டிருக்க மாட்டீர்கள். இந்த அனுபவங்கள் தந்த துணிவில்தான் எந்தக் காரணங்கொண்டும் எங்கள் நாட்டை விட்டுப் போவதில்லை என்கின்ற எண்ணத்தோடு, தொடர்ந்தும் எமது நாட்டில் இருந்து எங்கள் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறேன்.

எனது மனைவி சித்ரலேகா எனக்கு அருமையான துணை. என்னைப் போலவே பல்கலைக்கழகத்தில் படித்து ஒரு பேராசிரியராக இருக்கின்றார். அவருடைய துறை தமிழ் இலக்கியம்.

ஆனாலும், பெண்ணிய சம்பந்தமான விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவர் தனது மேல் படிப்பை ஒல்லாந்தில் படித்து முடித்தவர். அமெரிக்காவில் தொடர்ந்து படித்து, படிப்பித்தவர். அந்த வகையில் அவருக்கு உலக அனுபவம் உண்டு.

பல்வேறு கருத்தரங்குகளில் பங்குபற்றியிருக்கிறார். அவர் மூலம் தான் எனக்குப் பெண்ணியம் சம்பந்தமான கருத்துக்களும், கோட்பாடுகளும் தெரியவந்தன.

புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களைப் பற்றி, நவீனத் தமிழ் இலக்கியம் பற்றி யெல்லாம் எழுதியிருக்கிறார். முக்கியமாக விமர்சகராகவும் அறியப்படுகின்றார்.

மருத்துவம் குருபிரன்

# பிரசவவலி பயத்தைப் போக்கும் சீசர் அறுவை சிகிச்சை முறைமை

முன்பெல்லாம் 'கத்தி' பாவித்து குழந்தைபெறும் முறையென்று அடையாளப்படுத்தப்பட்டு வைக்கப்பட்ட சிசேரியன் அறுவையானது, தற்போது பல பெண்களால் விரும்பி ஏற்கப்படும் முறையாக மாறிவிட்டது.

மேலை நாடுகளில் ஒரு பெண் விரும்பினால் சீசர் முறையில் குழந்தையைப் பெற்றுக் கொள்ளமுடியும். பிரசவ வேதனையை விரும்பாத பல மேலை நாட்டுப் பெண்கள் -இப்போது அதிகமாக சீசர் முறையை நாடுகிறார்கள்.

இலங்கையில் சாதாரணமாக சீசர் அறுவைச் சிகிச்சை முறைக்கு சிபாரிசு செய்யப்படுவதில்லை. அதாவது சாதாரண இயற்கை வழியூடாக குழந்தையை பெறவல்ல திராணி உடைய பெண்கள் அவ்வாறு யோனி வழிப் பிரசவத்திற்கு ஊக்குவிக்கப் படுகிறார்கள். ஆனாலும் இவ்வாறு இயற்கை முறையில் பெறமுடியாத சந்தர்ப்பங்களில் சீசர் முறையைப் பயன்படுத்திக் குழந்தையை எடுக்கிறார்கள்.

**சீசர் என்றால் என்ன?**

எளிமையாக சொல்வதென்றால், வயிற்றை வெட்டி, அதனூடாக கருப்பையை வெட்டிக் குழந்தையை வெளியே எடுக்கும் முறை எனலாம்.

இதில் வேறுபடுகின்ற சில அம்சங்கள் காணப்பட்டாலும், பொதுவாகக் கருப்பையின் கீழ்ப்பகுதியினூடாக செய்யப்படும் அறுவையே (**Lower segmental caesarean section**) நிகழ்த்தப்படுகிறது.

இங்கு அடிவயிற்றில் தோலானது குறுக்காக வெட்டப்பட்டு, உள்ளே உள்ள ரெக்ரஸ் சீற் எனப்படும் நாரிழையம் வெட்டப்பட்டு, வயிற்றுத் தசை (ரெக்டஸ்) விலக்கப்பட்டு, கருப்பை அணுகப்படும். பின்னர் கருப்பை கழுத்துக்கு அருகில் (கருப்பையின் கீழ்ப்புறமாக) வெட்டி குழந்தை வெளியே எடுக்கப்படும். சாதாரணமாக இந்த அறுவைக்கு 20-30 நிமிடங்கள் போதுமானது.

**சீசர் செய்யும் போது இரத்தம் தேவைப்படுமா?**

சாதாரண பிரசவம் போன்றே இங்கும் இரத்த இழப்பு ஏற்படும். ஆயினும், தற்பாதுகாப்பாக ஒரு யூனிட் இரத்தம் முதலிலே ஏற்பாடு செய்யப்படும். எனினும் பெரும்பாலும், அதிக இரத்த இழப்பு ஏற்படாத நிலையில், இந்த இரத்தம் தாய்க்கு ஏற்றப்படுவதில்லை.

**அடுத்து வரும் பிரசவங்களில்....**

முதலாவது குழந்தை சீசர் என்றால், இரண்டாவது குழந்தை சாதாரண முறையில் பெறலாம். ஆனால் முதலாவதும், இரண்டாவதும் சீசர் பிரசவம் என்றால், மூன்றாவது பிரசவம் கட்டாயமாக சீசராகவே இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை பல மகப்பேற்று நிபுணர்கள், முதலாவது பிரசவம் சீசரில் அமைந்தால், இரண்டாவதையும் சீசரில் செய்யவே விரும்புகிறார்கள்.

**மயக்க மருந்து**

மகப் பழைய காலத்தில் சீசர் அறுவைக்காக தாயை முற்றாக நினைவிழக்கச் செய்தார்கள். இப்போது அவ்வாறு இல்லை, முள்ளந்தண்டின் கீழ்ப் பகுதியில் (நாரியில்) வழங்கப்படும் விசேட மயக்க மருந்து அடிவயிறு, தொண்டை, கால்கள் ஆகிய பகுதிகள் மட்டுமே விறைக்கச்செய்யும். ஆகவே தாயா. வள் குழந்தை பிறந்தவுடன் அதன் முதல் அழுகை ஒலியை கேட்கும் பாக்கியம் பெறுகின்றாள். தவிரவும் உடனடியாக பாலூட்டும் வாய்ப்பும் கிட்டுகின்றது.

**காயங்கள்**

கருப்பையில் கத்தி வைக்கும் போது தப்பித் தவறி உள்ளிருக்கும் குழந்தையில் பட்டுவிட்டால்.... அடடா என்னவாகும் என நீங்கள் அங்கலாய்க்கலாம். சாதாரணமாக இவ்வாறு காயங்கள் ஏற்படுவதில்லை. இதற்கு கருப்பையில் கீழ்ப்பகுதியூடாக வெட்டி அணுகும் முறையும் ஒரு காரணமாகும்.

**தாய் - சேய் பிணைப்பு**

நாங்கள் எடுத்ததெற்கெல்லாம் 'பனடோல்' போடுவதுபோல, மேலை நாட்டில் எடுத்ததெற்கெல்லாம் சீசர் செய்கிறார்கள். இதனால் பிரசவ வலியை அனுபவிக்கும் நிலை குறைகிறது.

இவ்வாறு பிரசவ வலியின்றி பெறப்படும் குழந்தைகளில் தாய் - சேய் ஒட்டுறவு குறைவாக காணப்படுவதாகச் சொன்னாலும் இது ஆராய்ச்சி பூர்வமாக உறுதிப்படுத்தப் படவில்லை. உங்களுக்கும் பிரசவ வலிக்கு பயமா? இருக்கவே இருக்கு சீசர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தலை குனியவைக்கும் செயற்பாடுகள்

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள், அரசியல் குறித்தும் - அரசியல்வாதிகள் குறித்தும் மக்கள் கொண்டிருந்த கருத்துக்களை பெரிதும் மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது.

13 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்விலே ஆரம்பித்த சண்டை சச்சரவுகள் தொடர் கதையாக நீண்டு செல்வதுடன்- நேற்று முன்தினம் அனைவரையுமே தலைகுனியவைக்கும் அளவுக்கு மோசமாகப் போய்விட்டது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ஒட்டுமொத்த இலங்கை மக்களையும்- சர்வதேசரீதியில் தலைகுனிவுக்குள்ளாக்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

நாடாளுமன்றம் குறித்து மக்கள் மத்தியில் இருந்து வந்த நம்பிக்கைகள் மதிப்புக்கள் யாவுமே சிதைந்து சின்னாபின்னமாகிவிட்டது.

நடுத்தெருவில் சண்டையிடும் ரவுடிகளைப் போன்று மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்கள் அடித்துக் கொண்டதும் அல்லோலகல்லோலப்படுத்தியதும் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்திருக்கின்றது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் புதிதாகப் பதவியேற்கக் கூடாது என்பதற்காக ஆளும் கட்சியினர் செங்கோலையே களவாடிச்சென்று ஜனநாயகத்தின் பெயரால் நாட்டை எப்படி கொள்ளையிடுகிறார்கள் என்பதற்கு நல்ல உதாரணம்.

நாடாளுமன்ற செங்கோலுக்கே பாதுகாப்பு இல்லாத அளவுக்கு நாடாளுமன்றம் மோசமான இடமாக மாறிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நாடாளுமன்றம் எவ்வாறு நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போகிறது.

இது மக்கள் முன் இருக்கும் முக்கியமான கேள்வியாகி விட்டது.

முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தில் சபாநாயகர் தெரிவின் போது இடம்பெற்ற மோசமான செயல்களும், வாக்குப்பெட்டிகள் மீது அமர்ந்து ஆளும் கட்சியினர் செய்த ரகளையும் இவர்கள் எப்படி நாடாளுமன்றம் வந்தார்கள் என்பதை எமக்குத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.

இப்போது செங்கோலையே களவாடி மறைத்து வைத்திருக்கும் அளவுக்கு ஆளும் கட்சியினரின் அடாவடித்தனம் அரங்கேறியிருக்கிறது. செங்கோலை மறைத்து வைப்பதற்கு ஆளும்கட்சியினர் எந்த நியாயத்தைக் கூறினாலும் ஏற்கமுடியாது.

இவற்றையெல்லம் விட நாடாளுமன்றத்தில் பௌத்த பிக்குகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், தென்னிலங்கை அரசியல் சக்திகளின் கீழ்த்தரமான சிந்தனைகள், வக்கிரங்களையே வெளிக்காட்டியிருக்கிறது.

நாடாளுமன்றத்துக்குப் பௌத்த பிக்குகள் வந்தது சரியா தவறா? என்பதல்ல முக்கியம். இது குறித்து பல்வேறு வாதப் பிரதி வாதங்கள் இருந்தாலும்-

நாடாளுமன்றத்துக்குள் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் சரி, முதலாவது கூட்டத் தொடரில் கேவலமாக நடத்தப்பட்டதும் சரி தவறான முன்னுதராணங்களாகவே கருதப்படும்.

பௌத்த பிக்குகள் அரசியலுக்குள் நுழைவதை யார் விரும்பியோ விரும்பாமலோ இருந்தாலும் தென்னிலங்கை மக்கள் விரும்பியிருக்கிறார்கள். இதனால் தான் ஒன்பது ஆசனங்களை ஹெல உறுமய வென்றிருக்கிறது.

ஜனநாயக ரீதியில் தான் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் என்றால்- பிக்குகளும் அவ்வாறே தெரிவானார்கள் என்பதை மறுத்து விடக்கூடாது.

இப்படியிருக்க பௌத்த பிக்குகளின் நாடாளுமன்றப் பிரவேசத்தை ஆளும் கட்சியினர் வெறுப்புடனும் எதிர்ப்புடனும் நோக்குவதும், வன்முறைகளை நிகழ்த்துவதும் ஜனநாயகத்துக்கு எவ்வகையிலும் பொருத்தமாகாது.

நாடாளுமன்றம் இவ்வாறு ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் அமளிதுமளிப்படுவதும் ஒத்திவைக்கப்படுவதும் தான் தொடர்கதையாக இருக்குமோ என்ற எண்ணத்தையே மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

நாட்டை வழிநடத்தும், நாடாளுமன்றத்தை வழிநடத்த முடியாத நிலை ஒன்று தோன்றியிருப்பதையே காணமுடிகிறது. இந்த நிலை தொடர்வது, நாட்டையே செயலற்ற தன்மைக்குக் கொண்டு சென்றுவிடும்.

ஆளும் கட்சி தமக்கு பெரும்பானமைப்பலம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் - தமக்கு ஆதரவு வழங்குவதில் இருந்து ஹெல உறுமய விலகிக் கொண்டதால் அவர்கள் மீது தொடர்ந்தும் விளையாடி வருகிறது.

இந்த நிலை தொடர்ந்தால் ஆளும்கட்சிக்கு நாடு முழுவதும் பெரும் பாதிப்புக்களையே ஏற்படுத்தும். இந்தச் சூழலில் நாடாளுமன்றில் குழப்பம் தொடர்ந்தால் மீளவும் தேர்தலைச் சந்திக்க நேரிடும் என்ற எச்சரிக்கையும் விடப்பட்டிருககிறது.

ஆக, ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் நாடாளுமன்றம் வர எவ்வாறும் அடித்துக்கொள்ளலாம். பின்னர் தாமாகவே நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு தேர்தலுக்கு உத்தரவிடலாம் என்று 'நிலைமை மோசமாகிவிட்டது. நாட்டு மக்களைப் பற்றியோ தேர்தலுக்கான செலவுகளைப் பற்றியோ இவர்களுக்கு கவலை இருந்தால் தானே?

## நாடும் நடப்பும்



# 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் 116ஆவது குரல் வெளியாகியுள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையின் வைகாசி மாதத்திற்குரிய 116 ஆவது குரல் 'சமாதானத்தின் எதிர்காலம் சர்வதேசத்தின் கைகளில்' என்ற முகப்புச் செய்தியுடன் நேற்று வெளியாகியுள்ளது. சிங்கள அரசின் படுகொலை அரசியல் எனச் சொல்லும் ஆசிரியத் தலையங்கத்துடன் வெளிவந்த இந்த ஏடு க.வே.பாலகுமாரன் எழுதிய 'புயலின் மையத்தில் புயல் இருப்பதில்லை' என்ற அரசியல் கட்டுரையையும் 'சிங்களத்தின் அரசியலின் அரசியலுக்கு ஏமாறும் வெளிநாடுகளும், அஞ்சும் தமிழ் மக்களும்', 'சந்திரிகாவின் சமாதான விருப்பு மனமாற்றமா? பாசாங்கா?' சந்தேகமும், நம்பிக்கையும் ஒருதோட்டத்துப் பயிரா!? கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய 'சிறுவர் நலனும் உலக சந்தேகமும்' போன்ற கட்டுரைகளையும் தாங்கி இந்த ஏடு வெளியாகியுள்ளது.

ஒளியேற்றும் காலம் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் 29ஆவது ஆண்டு நிறைவு நினைவூட்டல் கட்டுரையுடன், சைப்பிரஸ் மக்களின் போராட்ட விவரிப்பான துன்பம் தொடர் கதையாகின்றது.

மட்டக்களப்பின் கல்முனை படுகொலை நினைவூட்டல் கட்டுரையும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இந்த ஏடு வெளியாகியுள்ளது.

# பெண்களின் உடைகளில் புத்தர் சின்னம் வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் அனுமதி

புத்தர் பெருமானின் படங்கள் அச்சடிக்கப்பட்ட பெண்களின் நீச்சலுடைகள், இசைத்தட்டுக்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கை கொழும்பு சிறி சம்போதி விகாரையின் தர்மகம குசல தம்ம தேரர் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகளில் பௌத்த மதம் விற்பனைப் பொருளாகிவிடும் என்று இந்த வழக்கில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் பிரசன்ன லால் அல்விஸ் கூறியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நீதியரசர்களாக சரத் என் சில்வா, நிஹால் ஜயசிங்க, ராசா பெர்ணான்டோ ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது சுங்க அதிகாரி, பொலிஸ் மா அதிபர் சார்பில் வழக்கறிஞர் நிஹால் ஜயவர்த்தன ஆஜராகினார். இந்த வழக்கில் வெளிவிவகார அமைச்சை பிரதிவாதியாக குறிப்பிட நீதியரசர்கள் அனுமதி வழங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பண்டத்தரிப்பில் கொல்களம் அமைக்க ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

(சுதுமலை)

பண்டத்தரிப்பு பட்டினசபைக்குச் சொந்தமான பழைய காணியில் கொல்களம் அமைப்பதற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொல்களம் அமையவுள்ள இடத்தில் கண்ணிவெடிகள் உள்ளமையால், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் பண்டத்தரிப்பு பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நிரந்தரப் பகுதியில் கொல்களம் அமைத்துச் செயற்படவுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (91)

# மிதிவெடி அகற்றப்பட்ட பகுதி பிரதேச செயலரிடம் கையளிப்பு

உரும்பிராய் மூன்று கோவிலடிப் பகுதியில் வெடிபொருள் அகற்றப்பட்ட பகுதிகள் கோப்பாய் பிரதேச செயலரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். செயலக மிதிவெடி அகற்றும் பிரிவின் நடவடிக்கை உத்தியோகத்தர் செந்தில் இந்தப் பகுதிகளை பிரதேச செயலக அதிகாரிகளிடம் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் வழங்கினார்.

தொடர்ந்து சிலபகுதிகளை யாழ். செயலக மிதிவெடி அகற்றும் பிரிவினர் பொது மக்களின் பாவனைக்கு வழங்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை, கோப்பாய், தனங்கிளப்பு முதலான பகுதிகளில் உள்ள வெடிபொருள் அகற்றப்பட்ட பகுதிகளில் மக்கள் குடியமர்வதற்கான பகுதிகள் விரைவில் மக்களிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாகவும் அந்த இடங்களை சோதனையிடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

# துன்னாலை தக்குச்சம்பா வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படவில்லை

துன்னாலை தக்குச்சம்பா வீதி (காந்தி வீதி) சுமார் 15 வருடகாலத்துக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருப்பதனால் இந்த வீதியினைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யும்படி கட்டைவேலி சனசமூக நிலைய நிர்வாகத்தினரும், துன்னாலை மேற்கு மக்களும் பல தடவைகள் கரவெட்டி பிரதேச சபையினிடம் முறையிட்டும் இதுவரை இந்த வீதி புனரமைக்கப்படவில்லை.

இந்த வீதியை திருத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

# விளையாடப்போவதாக கூறிச்சென்ற சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லை

**மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு**

விளையாடச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டில் இருந்து சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லை என அவரது உறவினர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அராலி கிழக்கு அராலியைச் சேர்ந்த 15வயதான ஆறுமுகம் கிருபாகரன் என்ற சிறுவனையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் தனது வீட்டில் இருந்து விளையாடச் செல்வதாகக் கூறிவிட்டு புறப்பட்ட சிறுவன் மறுநாள் மதியம் வரை வீடு திரும்பவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவனை பற்றித் தகவல் அறிந்தவர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை இன்றுமுதல் ஆரம்பம்

யாழ். பிரதேசசெயலர் பிரிவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 10, 11, 14, 15ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் 12.30 வரையும் மாலை 2.30 தொடக்கம் 4.00 மணிவரையும் இடம்பெறும்.

விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்கப்பெறாதோர் பிரதேச செயலக திட்டமிடல் கிளையுடன் தொடர்புகொள்ளவும்.

நேர்முகப்பரீட்சைக்கு வரும் பொழுது தேசிய அடையாள அட்டை, பட்டதாரிச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணமானால் விவாக அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றின் மூலப்பிரதியுடன் சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

அரசியல்நோக்கு

சிவராஜா ரமணன்

# தோல்விகண்ட நகர்வுகளுடன் துவண்டு போயுள்ள சந்திரிகா

ஆட்சித் தலைமைப் பொறுப்பைத் தன்னகத்தே கொண்டவராகவும், நிறைவேற்று அதிகாரததை தொடர்ந்தும் தன்னகத்தே வைத்திருக்க வேண்டும் என்ற நப்பாசை காரணமாகவும் ஜனாதிபதி சந்திரிகா - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையை கலைத்துப் புதிய தேர்தலுக்கான அழைப்பினையும் விடுத்திருந்தார்.

அவரது அமைச்சுக் கலைப்பிற்கான பிர



தான நோக்கமாக விளங்கியவை

ஜனாதிபதி ஆட்சிக் காலம் இரண்டு தடவைகளுடன் முடிவடைவதால் அரசியல் யாப்பில் மாற்றத்தைக் கொண்டுவந்து பிரதமர் பதவிக்கு அதிகாரத்தை வலுவாக்கி தான் பிரதமராவது

சர்வதேச ரீதியாக வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிதியுதவியை தான் பெற்று அதனைக் கையாள்வது

தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படுவதாக இருந்தால் அது தன்னால் வழங்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

போன்ற சில தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டே ரணில் தலைமையிலான அமைச்சரவைக் கலைப்பினை சந்திரிகா மேற்கொனண்டார்.

இந்த நிலையில் தனது கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியுமோ என்ற சந்தேக நிலை யில் இருந்த சந்திரிகா, சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா உள்ளிட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர் அழுத்தம் காரணமாக ஜே.வி.பியுடன் இணைந்து கூட்டுக் கட்சி ஒன்றை அமைக்க உடன்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தோற்றத்திற்கும் வழிசெய்தார்.

இறுதியில் நடைபெற்ற தேர்தலுக்கு, தானே குழப்பிய தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளை - தானே குற்றம் கூறிய நோர்வேயின் அனுசரணையில் மேற்கொள்ளப் போவதாகவும்,

கிராமிய ரீதியாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளப்போவதாகவும், அனைவருக்கும் வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகவும் பல்வேறு வாக்குறுதிகளை முன்வைத்து போட்டியிட்டார்.

தேர்தலில் கூட்டணி சேர்ந்தும் கூட சந்திரிகாவினால் நாடாளுமன்றத்திற்கான பெரும்பான்மைப்பலத்தை நிரூபிக்க முடியவில்லை.

இந்நிலையில் கூட்டுக்கட்சிகளுடன் இணைந்தும் கூட, 106 ஆசனங்களை மட்டுமே சந்திரிகாவினால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

சிறுபான்மைப் பலத்தினை வைத்துக் கொண்டு ஆட்சி அமைக்க முற்பட்ட அவர் தனது முக்கிய ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்க முற்பட்டு அதிலும் தோல்வி கண்டார்.

புதிய பிரதமராக நீண்ட அரசியல் அனுபவம் மிக்கவரும், பண்டாரநாயக்கா குடும்பம் போன்ற அரசியல் பலம் மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவருமான மஹிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதால் தனது குடும்ப அரசியல் செயற்பாட்டைக் கூட எதிர்காலத்தில் இழக்க வேண்டிய நிலைக்கு சந்திரிகா தள்ளப்பட்டார்.

இதேவேளை ஆட்சிப்பங்கீட்டில் ஏற்பட்ட மகாவலித்துறை தொடர்பான இழுபறிநிலையில் தனதுகட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் தீர்வு காண்பதில் பலத்த நெருக்கடிகளை எதிர் கொண்டார்

சந்திரிகாவால் ஆட்சி அமைக்கப்பட்ட



தும் முதல் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக வாக்களிக்கப்பட்டிருந்தது. வாக்களிப்பட்டு நீண்ட காலமாகியும் சமாதான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் சபாநாயகர் தெரிவில் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திரிகாவிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக சபாநாயகர் பதவிக்குப்போட்டியிட்ட லொக்கு பண்டாரவிற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்தச் செயற்பாட்டால் நிலைகுலைந்த சந்திரிகா, சபாநாயகர் தெரிவு இடம்பெற்று சிலமணிநேரங்களிலேயே நோர்வேயுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு அவர்களை சமாதான நடவடிக்கைகளில் நடுநிலையாளர்களாகச் செயற்படவருமாறு அழைப்பு விடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக நோர்வே அனுசரணையாளர்களும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளில் துரிதமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணில் அரசுடன் ஆராயப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயங்களில் இருந்தே பேச்சுக்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என வலியுறுத்த, அதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கூட்டுக் கட்சியான ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை ஒப்படைக்கப்படக்கூடாது என வலியுறுத்தியது.



இதனால் சர்வதேச நாடுகளால் வழங்கப்படவிருந்த நிதி உதவி சமாதான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கத் தவறினால் பிறிதொரு வறிய நாட்டிற்கு வழங்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையில் சந்திரிகா முடிவுகளை எடுப்பதில் பாரிய குழப்பநிலைக்கு உட்பட்டு பேசாப் பொருளாய் அறிக்கைகளைக் கூட வெளியிட முடியாதவராய் காணப்பட்டார்.

அதேவேளை,

இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முந்திய கூட்டத் தொடரில் பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது.

பிரதி சபாநாயகர் தெரிவின் போது எதுவித குழப்பமும் இன்றி ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் பிரதி சபாநாயகராகத் தெரிவானார். அவர் தெரிவு செய்யப்படுவதற்கு எதிர்க்கட்சிகளால் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கான பிரதான காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தன.

இருப்பினும் இச்செயற்பாடு ஜே.வி.பிக்கு தெரியாமல் மேற்கொள்ளப்பட்டமை அக் கட்சியை கடும் விசனத்துக்கு உட்படுத்தயதன் விளைவாக அதன் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தமது கட்சி அனைத்து வழிகளிலும் புறக்கணிக்கப்படுவதாகவும், அனைத்துச் செயற்பாடுகளும் தமக்குத் தெரியாமலேயே மேற்க்கொள்ளப்படுவதாக



வும், தாம் பிரிந்து செயற்பட நேரிடலாம் என்ற தொனிப்பட எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கும் சமாதான நடவடிக்கைகள் குறித்த சர்வதேச அழுத்தங்களுக்கும் தீர்வு காண்பதற்கும் பாரிய அளவில் குழம்பிப் போயிருந்த அவர் இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடர் மூலம் அந்தோ கதிக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

இறுதிக் கூட்டத் தொடர் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் புதிய பரிமாணத்தைத் தொட்டு நிற்கின்றது என்று கூறலாம்.

கூட்டத் தொடரில் ஜாதிக ஹெல உறுமயவின் அக்மீமன தயாரட்ண தேரர் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளதாக கடந்த 19ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் அவரது பதவிப்பிரமாணம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைய பதவிப்பிரமாண அறிவிப்பு விடுக்கப்பட்டதும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே அக்மீமனதேரருக்கு எதிராக கதலுவே ரத்னசீக தேரர் மேற்கொண்ட வழக்குத் தாக்கலின் அடிப்படையில் மேல் நீதிமன்றம் அக்மீமன தேரரை பதவிப்பிரமாணம் செய்ய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி கூச்சலிட்டுக் குழப்பினார்.

இந்நிலையில் தடைஉத்தரவு சபாநாயகரின் கைகளில் கிடைக்கவில்லை என்று அக்மீமன தேரர் பதவிப்பிரமாண நிகழ்விற்காக அழைக்கப்பட்டிருந்தார்




இந்நிலையில் அங்கு குழப்பத்தை உண்டு பண்ணி பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரமுகர்கள் பௌத்தர்கள் புனிதமாகப் போற்றும் பௌத்த மதகுருமாரை இழிவானவார்த்தைகளால் திட்டி, அவர்களது ஆடைகளைப் பிடித்து இழுத்து அசிங்கப் படுத்தியது மட்டுமன்றி, அவர்களைத்தாக்கிக் காயபபடுத்தியும் உள்ளனர். இச்செயற்பாடானது இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் இடம் பெற்ற மிகமோசமான கீழ்த்தரமான காலப் பதிவு என்று ஊடகங்கள் சித்தரித்துள்ளன.

ஏற்கனவே கேள்வி நிலையில் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆட்சி நகர்வை மேற்கொண்டு வந்த சந்திரிகாவிற்கு தனது கட்சியினரால் பௌத்தமத குருமார் இவ்வாறு இம்சைப்படுத்தப்பட்டமை எதிர்காலத்தில் எந்தளவிற்கான ஆதரவுத் தன்மையைப் பெற்றுத் தரும் என்ற கேள்வி நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதேவேளை கடந்த போர் நடவடிக்கைளின் போது ஜனாதிபதி சந்திரிகா தமிழ்மக்களின் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கு மேற்கொள்ளும் படைநடவடிக்கைகளை பௌத்த மதகுருமாரின் ஆசீர்வாதம் இன்றி மேற்கொள்வதில்லை என்பதும் நினைவிற்கொள்ளத்தக்கது.

மதகுருமார் தாக்கப்பட்டமை பௌத்த மதவாதிகளிடம் பாரிய அளவிலான ஆளும் அரசு மீதான வெறுப்புணர்வினைத் தோற்றுவித்துள்ளதாக சிங்கள மக்களின் கருத்து வெளிப்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் பொதுப் போக்கினைக் கடைப்பிடித்து வந்த ஜாதிக ஹெல நாடாளுமன்ற உறுப்பினர் பதவிப்பிரமாணம் செய்வதற்கு ஆளும் அரசு ஏன் எதிர்ப்பினைத் தெரிவிக்கவேண்டும் என்ற கேள்வி எழுகின்ற போதிலும் சபாநாயகர் தெரிவின் போது பதவி விலகிய அல்லது விலக்கப்பட்ட ரத்தன சீல தேரரும் அவரது சகாவும் காணாமல் போயிருந்தமையும் பின்னர் அவர்கள் வாக்களிப்பின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு சாதகமாக வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தமையும் ஏற்கனவே அறியப்பட்ட விடயங்கள் இருப்பினும் அவர்கள் வாக்களிப்பிற்கு சந்திரிகாவின் ஆலோசகர் ஒருவரின் வாகனத்தில் வந்திருந்ததாகவும், மற்றையவர் ஜே.வி.பியின் வாகனம் ஒன்றில் வந்திருந்ததாகவும் எதிர்கட்சியாலும், ஜாதிக ஹெலஉறுமயவாலும் குற்றம் சாட்டப்பட்ட போதிலும் ஆளும் சந்திரிகா தலைமையிலான அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பௌத்த மதகுருமார் ஆளும் அரச பிரமுகர்களால் தாக்கப்பட்டமைக்கான கேள்விக்கான பதிலாக முன்னைய சம்பவத்தைத் தெரிவிக்கலாம்.

இதேவேளை ஆளும் அரசிலும் பார்க்க எதிர்கட்சியிடமே பெரும்பான்மை உள்ளது. எதிர்க்கட்சிகள் நினைத்தால் ஆட்சிக் கவிழ்ப்பை இலகுவாக மேற்கொள்ள முடியும் என்று 118 நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் எச்சரிக்கை விடுக்கப்படுவதாக எடுக்கப்பட்ட தீர்மானம் இறுதியாக சந்திரிகாவிற்கு தலைமேல் விழுந்த சம்மட்டியாக...

இந்நிலையில் ஆட்சி ஆசையால் அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவர எடுத்த முயற்சி பயன் தராத நிலையிலும்

சந்திரிகா சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் சர்வதேச நிதியுதவிகளை இழக்கும் அபாயத்திலும், கூட்டுச் சேர்ந்த கட்சியின் கொள்கைகளுடன் இணைந்து போக முடியாமல் கட்சியைக் கொண்டு நகர்த்த முடியாத அவல நிலையிலும்,

பௌத்த மதகுருமார் தனது கட்சியினரால் தாக்கப்பட்டமையால் பௌத்த மதவாதிகள் உள்ளிட்டோரின் எதிர்ப்பு நிலையிலும்,

இறுதியாக எதிர்க்கட்சிகளால் விடுக்கப்பட்ட பதவிக் கவிழ்ப்பு எச்சரிக்கைக் குழப்பத்திலும் படுகுழிக்குள் அகப்பட்ட யானையாய் கேள்விக்குறிகளுடன் உள்ளார்.

யாழ்ப்பாணம்

# இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் காஸாவில் ஏவுகணைத் தாக்கு!

(ஜெருசலேம்)

காஸா நகரில் இஸ்ரேலிய ஹெலி கொப்ரர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின. நேற்றுமுன்தினம் நளளிர வுக்குச் சற்றுமுன்னர் காஸாவில் உள்ள உலோகத் தொழிற்சாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், இஸ்ரேலின் தென்பகுதி நகரில் இடம்பெற்ற தாக்குதலுக்குப பதிலடியாகவே இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

காஸா நகரில் உள்ள அகதி முகாமில் உள்ள மோட்டார் சைக் கிள் உற்பத்தித் தொழிற்சாலை மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்லாமிய போராளிக் குழுவான ஹமாஸ் இயக்கத்தின் ஆயுதங்கள், வெடிபொருட்கள் இந்தத் தொழிற் சாலையில் இருந்ததாக இஸ்ரேலிய இராணுவத் தரப்புத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் இரண்டு பலஸ்தீனர்கள் சிறிய காயங்களுக் குள்ளானதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தத் தாக்குதல் நடைபெறு வதற்கு சில மணிநேரங்கள் முன்ன தாக ஹமாஸ் போராளிகள் ஏவிய ஏவுகணை ஒன்று இஸ்ரேல் குடியி ருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித் தது குறிப்பிடத்தக்கது.

# கொங்கோவின் கிழக்கு நகரை அரச படைகள் மீளக் கைப்பற்றின!

கொங்கோ ஜனநாயகக் குடியர சின் அரசாங்கத் துருப்புக்கள், கிழக் குப்புற நகரான புக்காவுகை கிளர் சிப் படைகளிடமிருந்து மோதல்கள் எதுவுமின்றி மீளக் கைப்பற்றின.

ஒரு வாரத்துக்கு முன்னர், கிளர் சிப் படைகள் கைப்பற்றிய புக்காவு நகருக்குள் அரச படைகள் அணி வகுத்துக்கொண்டு உள்நுழைந்த போது -

அங்கு வசிக்கும் மக்கள், பாடல் களை பாடியும், இசைக்கருவிகளை இசைத்தும் வரவேற்றனர்.



கேணல் ஜூலிஸ்முரேபுகி தலை மையிலான கிளர்ச்சிப் படைகள் இரவோடு இரவாக புக்காவு நகரில் இருந்து வெளியேறிச் சென்ற பின் னரே அரச படைகள் நகரத்தைக் கைப்பற்றின.

புக்காவு நகரைச் சூழ முன்னர் இடம்பெற்ற சண்டைகளால், கொங்கோ குடியரசின் அதிகாரப் பகிர்வுக்குப் பெரும் அச்சுறுத்தல் உருவாகியி ருந்தது.

புக்காவு நகரைக் கிளர்ச்சிப் படை கள் கைப்பற்றிய பின்னர், ஐ.நாவுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதையடுத்து செவ்வாய்க்கிழமை மாலை, நகர வீதிகளில் காணப்படும் கேணல் முரேபுசியின் கிளர்ச்சிப் படையினர் கைதுசெய்யப்படுவார்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந் தது.

இன்னொரு புறத்தில் ஜெனரல் லோறன்ட் எக்குண்டா தலைமை யில் பல்லாயிரக்கணக்கான துருப் புக்கள், நோட்கிவு மாகாணத்திலி ருந்து தென்பகுதியூடாக புக்காவு நகருக்குள் நுழைந்தன.

இதையடுத்தே கிளர்ச்சிப்படை கள் புக்காவு நகரிலிருந்து விலகிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

# ஈராக்கின் தீர்வுத் திட்டத்திற்கு உலகநாடுகள் ஆதரவளிப்பு!



ஈராக்கின் எதிர்காலத் தீர்வுத் திட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா வும் பிரிட்டனும் ஐ.நா.பாதுகாப்புச் சபையிடம் ஏகமனதாகச் சமர்ப்பித்த திட்டத்தின் பின்னால் உலகநாடு கள் அனைத்தும் நிற்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

இந்தத் தீர்வுத்திட்டத்தை எதிர்த்த ஆயுததாரிகள் தற்போது ஒன்றுபட்ட உலகத்தின் எதிர்ப்பைச் சம்பாதித் துள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக்கின் தீர்வுத்திட்டம் நிறைவேற் றப்பட்டமையானது மிகப்பெரிய வெற்றியென அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஈராக்கில் படை நடவடிக்கையினை மேற்கொண்ட போதும் இந்தத் தீர்வுத்திட்டத்துக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையிலுள்ள 15 உறுப்புரிமை நாடுகளும் ஏகமன தாக தமது ஆதரவைத் தெரிவித் துள்ளன.

ஈராக்கின் தீர்வுத்திட்டமானது புதிய ஈராக்கிற்கு ஒரு மைல்கல் என பிரிட்டன் பிரதமர் ரொனி பிளே யர் தெரிவித்தார். இந்தத் தீர்வுத்திட் டம் குறித்து பாதுகாப்புச்சபை எடுத்த தீர்மானமானது மிகவும் முக்கியமான தென ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூது வர் தெரிவித்தார். ஆனாலும் தீர்வுத் திட்டம் வெற்றிபெறுவதென்பது ஈராக் கிய அரசு அந்நாட்டு மக்களின் மனங்களை வெல்வதிலேயே தங்கி யுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

ஈராக்கிய மக்களுக்கான முன் னோக்கிய நகர்வே இந்தத் தீர்வுத் திட்டமென ரஷ்ய அதிபர் விளாடி மிர் புடின் தெரிவித்தார்.

ஈராக்கின் இறைமைக்கு இந்தத் தீர்வுத்திட்டமானது முக்கியமான முன்னோக்கிய நகர்வென ஐ.நாவுக் கான ஜேர்மன் தூதுவர் தெரிவித் தார்.

ஈராக்கிற்கான எதிர்கால வளர்ச் சிக்கு சர்வதேச நாடுகளின் உதவி இன்றியமையானது. அத்துடன் ஈராக் கில் அமெரிக்காவின் கட்டளையின் கீழ் இரண்டு படைப்பிரிவுகள் நிறுவப் படவுள்ளன. ஏனெனில் விசேடமாக ஈராக்கிலுள்ள ஐ.நா. சபையினரைப் பாதுகாப்பதற்காக என ஐ.நாவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் நிக் கிறோபொன்ட் தெரிவித்தார்.

# கபோன் விமான விபத்தில் 16 பயணிகள் உயிரிழப்பு!

(லிப்ரவில்)

மேற்காபிரிக்க நாடான கபோனில் பயணிகள் விமானம் ஒன்று விபத் துக்குள்ளானதில் - பதினாறு பேர் கொலலப்பட்டிருக்கலாம் என - அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

29 பயணிகளுடன் கபோனின் தலைநகரான லிப்ரவிலில் இருந்து புறப்பட்ட தனியார் போக்குவரத்து விமானமே விபத்துக்குள்ளானது.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன் தினம் காலை 9.15 மணியளவில் புறப்பட்ட இந்த விமானம் சற்று நேரத்தில் கபோன் வளைகுடாவில் - கரையிலிருந்து 100 மீற்றர் தொலை வில் வீழ்ந்தது.

கபோனில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுத் துருப்புக்கள் உடனடி யாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத் தப்பட்டனர்.

கபோன் ஜனாதிபதியின் அலு வலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தச் சம்பவத்தில் சிக்கிய 11 பயணிகள் மீட்கப்பட்ட தாகவும் மூன்று பேர் காணாமற் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த அறிக்கையில் விபத்துக் கான காரணம் எதுவும் குறிப்பிடப் படவில்லை.

# பாகிஸ்தான் படையினர் தாக்குதல்; ஆயுததாரிகள் ஏழு பேர் உயிரிழப்பு!

பாகிஸ்தானுடன் இணைந்த ஆப் கான் எல்லைப் பகுதியில் பாகிஸ் தான் படையினர் மேற்கொண்ட தாக்கு தலில் ஆயுதாரிகள் ஏழுபேர் கொல் லப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணு நிலைகள் மீது ஆயுத தாரிகள் றொக்கட் தாக்குதலை நடத்தியதாகவும், அதன்பின்னரே படையினர் அவர்கள் மீது தாக்கு தலை நடத்தியதாகவும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரி பிரிகேடியர் ம.். மூட்சா தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அனைத்து ஆயுததாரி களும் வெளிநாட்டவர்கள் எனவும் உயிரிழந்த ஆயுததாரிகளின் சடலங் கள் அடையாளம் காணப்படவோ, மீட்கப்படவோ இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயுதாரிகள் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோட்டார்கள் கொண்டு படையினரைத் தாக்கிய தாகவும் படையினரும் கனரக ஆயு தங்கள மூலம் தாக்குதலை நடத்திய தாகவும் பிரிகேடியர் ஷா, தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட் டியில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் பரா படை யினரோ அல்லது சிப்பாய்களோ காயமடையவில்லையென அவர் தெரிவித்தார்.

# போதைப் பொருள் களஞ்சியம் பிஜி பொலிஸாரால் கண்டுபிடிப்பு!

பிஜியின் தலைநகர் சுவாவிற்கு வெளியே அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் போதைப் பொருட்கள் மற்றும் இரசா யன மருந்துகள் பதுக்கி வைக்கப் பட்ட களஞ்சியசாலையொன்றைக் கைப்பற்றினர்.

இந்தக் களஞ்சிய சாலையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட் கள் மற்றும் இரசாயன மருந்து களின் பெறுமதி ஐந்நூறு மில்லி யன் அமெரிக்க டொலரென பிஜிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட கள் இந்தப் பிராந்தியத்திலேயே மிகப் பெரிய தொகையென பிஜி பொலிஸ் ஆணையாளர் அன்ட்ரூ கியூஸ் தெரிவித்தார்.

மூன்று களஞ்சியசாலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச ரீதியில் போதைப் பொருட்களை அதிகளவில் உற் பத்தி செய்யும் இடமாக பிஜி மாறி வருவதாகவும், இந்தச் செயல்களில் ஈடுபடுவோர் பிஜிக்கு வந்து போதைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடும் உள்ளூர் குற்றவாளிகளுடன் இணைநது செயற்படுவதாகவும் பொலிஸ் ஆணை யாளர் தெரிவித்தார்.

இந்தக் களஞ்சியசாலையைக் கண்டுபிடிப்பதற்கு பிஜி பொலிஸா ருடன் நியூசிலாந்து, அவுஸ்ரேலிய நாடுகள் நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத இந்தத் தொழிற் சாலையைக் கடந்த ஒரு வருடமாக கண்காணித்து வந்ததாகவும் தற் போதே இங்கு உற்பத்தி ஆரம் பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கைது செய்யப்பட்ட ஏழு பேரில்




நான்கு பேர் ஆசிய நாட்டவர்கள். மூவர் பிஜி நாட்டவர்கள். இவர்கள் அனைவரும் இன்று பிஜி நீதி மன்றில் நிறுத்தப்படவுள்ளனர்.

ஒரு வாரத்திற்கு ஐநூறு கிலோ கிராம் போதைப் பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுவதாக பிஜி பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆப்கானில் ஒரு வாரத் தாக்குதலில் 70 தலிபான் போராளிகள் உயிரிழப்பு!



கடந்த ஒரு வாரமாக ஆப்கான் தென்பகுதி மலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற தலிபான்களுக்கெதிராக ஆப்கான் மற்றும் அமெரிக்கப் படை களின் இராணுவ நடவடிக்கையில் குறைந்தது 70 தலிபான்கள் கொல் லப்பட்டதாக ஆப்கான் இராணுவ அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட படையினர் நேற்று முன்தினம் தமது தளங்களுக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

ஆப்கான் படைகளின் தளபதி யும், உருஷ்கான் மாகாண ஆளுநரு மான மொஹமட் கான் தெரிவிக் கையில் -

ஒரு வாரகாலமாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் 73 தலி பான்கள் கொல்லப்பட்டதுடன் 13 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் இந்த நடவடிக்கையில், ஆப்கான் படையினர் 6 பேரும் அமெரிக்க கூட்டுப்படையினர் 4 பேரும் காயம டைந்ததாகவும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் உடனடியாக கருத்தெ தனையும் தெரிவிக்கவில்லை.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த தலிபான்களின் 21 உடல்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் இதற் குள் தலிபானின் தளபதிகளான முல்லா ஜபார் மற்றும் முல்லா ஜலான் ஆகியோரும் அடங்குவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரே பிரசவத்தில் 7 குழந்தைகள்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் உள்ள ஒரு வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக் கப்பட்டிருந்த பலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹாலா ஈத் என்ற பெண் ஒருவர் சத்திரசிகிச்சை மூலம் 7 குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.



இவற்றில் 4 ஆண் குழந்தைகள், 3 பெண் குழந்தைகள்.

இவற்றில் இரண்டு குழந்தைகள் பிறந்து ஒரு சில மணி நேரத்தில் இறந்துவிட்டன.

மீதமுள்ள குழந்தைகளைப் பாதுகாக்க வைத் தியர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின் றனர்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சமுத்திரத் தரைப்பரப்பில் 0.5 வீதத்துக்கும் குறைவான இடத்தையே முருகைக் கற்பாறைகள் எடுத்திருந்தாலும், கடல் வாழ் உயிரினங்களில் 90 வீதத்துக்கும் அதிகமான இனங்கள் இந்தப் பாறையிலேயே தங்கியுள் ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் மீதான தடையை விலக்க திருமாவளவன் கோரிக்கை!

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலாளர் திருமாவளவன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழ்நாடு - திருநெல்வேலி நகரில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த அவர்,

இலங்கையில் தமிழர்களின் விடுதலைக்காக இரண்டு தசாப்த காலமாகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது அவசியமற்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளமையால், இந்திய அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் சிறுபான்மை இன மதக் குழுக்களின் அபிலாசைகளுக்கு ஆதரவளிப்பது என்ற புதிய மத்திய அரசாங்கத்தின் குறைந்தபட்ச பொது நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையை ஆதரித்துள்ள திருமாவளவன், அந்தத் திட்டம் இலங்கைத் தமிழர் விவகாரத்திலும் உரியமுறையில செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

# பிக்குகள் தாக்கப்பட்டதை கண்டித்து கொழும்பில் நேற்று சத்தியாக்கிரகம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் வைத்து இரு பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை பெருந்திரளான பௌத்த பிக்குகள் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் எல்லாவெல மெத்தானந்ததேரர், பௌத்த தர்மத்தையும், அமைதியையும் காப்பதற்காகவே பௌத்த குரு முதல்வர்களாகிய நாம நாடாளுமன்றம் சென்றோம். ஆனால், எம்மைப் புறக்கணித்து, சில சக்திகள் எம்மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

அக்மீமன தயாரத்ன தேரர், வண.கொலன்னாவ சுமங்கல தேரர் ஆகிய இருவர் மீதும் நாடாளுமன்றத்தில் வைதது தாக்குதல் நடத்தியமை பௌத்த மதத்தை அவமானப்படுத்தும் செயலாகும் எனத் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து விகாரமாதேவி பூங்காவில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தும் பிக்குகள்.

## நாணயமாற்று விகிதம்

| நாடுகள் | கொள்வனவு | விற்பனை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 99.33 | 100.17 |
| ஸ்ரேலிங்பவுண் | 181.88 | 184.32 |
| யூரோ | 121.08 | 122.96 |
| சுவிஸ்பிராங் | 79.55 | 81.33 |
| அவுஸ்ரேலிய டொலர் | 68.84 | 70.39 |
| ஜப்பான் யென் | 00.90 | 00.92 |

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

2005 A/L
(2004 பரீட்சைக்குத் தோற்றியவர்கட்குரியது)
சனி, ஞாயிறு
மீட்டல் வினாவிடை வகுப்புகள்

PHY MR.குமரன் 06.00 - 07.00
BIO MR.கெங்காதரன் 07.00 - 08.00
BIO MR.குணசீலன் 08.00 - 09.00
CHE MR.மணியம் 09.00 - 10.00
CHE MR.மகேஸ்வரன் 09.00 - 10.00
PHY MR.சோதிலிங்கம் 10.00 - 11.00

(சி-2654)

### மிக் ரக...

மேலாக தெரிந்துகொண்டிருக்கின்றது. விமானம் விபத்துக்குள்ளான சில நிமிடங்களில், அந்தப் பகுதிக்கு விரைந்த விமானப்படையினர் வாவியிலிருந்து விமானியை மீட்டெடுத்தனர்.

இதேவேளை - இந்த விமானத்துடன் பயிற்சிக்காகப் புறப்பட்ட மிக் - 23 விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியதாக விமானப்படையினர் தெரிவித்தனர்.

மிக் - 27 ரக விமானம் விபத்துக்குள்ளானதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த விமானப் படையினரும், கடற்படையினரும் உடனடியாக மீட்பு நடவடிக்கையில் இறங்கினர்.

மூன்று துண்டுகளாக நீரில் மூழ்கியிருக்கும் விமானத்தை மீட்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றும், விமானத்தின் கறுப்புப்பெட்டி நேற்றுமாலை சுழியோடிகளால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கியுள்ள விமானத்தை மீட்பதற்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விமான விபத்துக்குறித்து விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உயர் மட்டக்குழுவொன்றை, விமானப் படைத் தளபதி எயார்வைஸ் மார்ஷல் டொனாலட் பெரேரா நியமித்துள்ளார். விமானப்படையைச் சேர்ந்த குறூப் கப்டன் புலத்சிங்க தலைமையில் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு உக்ரேனிடமிருந்து வாங்கப்பட்ட இந்த மிக் -27 ரக தரைத்தாக்குதல் விமானம் சுமார் 200 மில்லியன் ரூபா பெறுமதியானதாகும். இது புலிகளுக்கெதிரான போரில் முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது.

விபத்துக் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள உக்ரேனின் நிபுணத்துவ உதவியை நாடவிருப்பதாகவும் விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

### நேற்றிரவு...

மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாகப் பெய்தது. யாழ்ப்பாணத்தின் பல வீதிகள் மழை நீரால் மூடப்பட்டிருந்தன.

இதேவேளை வன்னிப் பகுதியில் பெய்த மழையால் வீதிகள் பல நீரால் மூடப்பட்டு பே. ;குவரத்துக்கள் தடைப்பட்டன. இந்தத் திடீர் மழை காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காயமுற்ற பிக்குகளை ரவிராஜ், சிவாஜிலிங்கம் நலன் விசாரித்தனர்!

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமளிதுமளியின்போது காயமடைந்த பிக்குமார் இருவரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டதுடன் அவர்களின் நலன்களையும் கேட்டறிந்தனர்.

நேற்றுமுன்தினம் நடாளுமன்றம் கூடியவேளை ஏற்பட்ட அமளி துமளியின்போது, ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கொலன்னாவ சிறி சுமங்கல தேரர், அக்மீமன தயாரத்தின தேரர் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவர்கள் இருவரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ் ஆகிய இருவரும் வைத்தியசாலைக்கு சென்று அவர்களின் நலன்களை கேட்டறிந்தனர்.

ஜாதிக ஹெலஉறுமய தமிழ் மக்களுக்கெதிராக இருப்பினும் தமிழ் மக்களின் மனிதாபிமானத் தன்மையையும், நல்லெண்ண முயற்சிகள் குறித்தும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்ற வெளிப்பாட்டின் அடிப்படையிலேயே தாம் அவர்களை சென்று பார்வையிட்டதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

### நடேசன்...

பாட்டத்தில் கலந்துகொண்டவர்களை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய பத்திரிகையாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுபபினர்களின் உரைகளை குறித்துக் கொண்டதுடன் தமக்கு விளங்காதவற்றை அருகில் நின்றவர்களிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரியவருகின்றது.

### குடாநாடு...

கேட்கப்பட்டுள்ளது. அன்றையதினம் காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலிலிருந்து ஆரம்பமாகும் கண்டனப்பேரணி சோமசுந்தரம் வீதியூடாக கண்டி வீதியை அடைந்து யாழ்.செயலகத்தில் முடிவடையும்.

யாழ்.செயலகத்தை அடைந்ததும், ஜனாதிபதிக்கான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

இப்பேரணி நகரும் வேளையில் மகஜர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இப்பேரணியினை குடாநாடு தழுவிய ரீதியில் நடாத்துவதற்காக மாவட்ட, கோட்ட, பிராந்திய மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### புலிகள் அமைப்பில் இணைந்த 13 சிறுவர்கள் ஒப்படைப்பு

திருமலையில் இருந்து விடுதலைப்புலிகளின் அமைப்பில் இணைந்து கொண்ட 13 சிறுவர்கள பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் கிழக்கு, சம்பூர் பகுதிகளைச் சேர்ந்த 13 சிறுவர்களே விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைஅலுவலகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், பெற்றோர்களிடம் சிறுவர்களை ஒப்படைத்தார். இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மூத்த தளபதி கேணல் பானு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### கூட்டமைப்பு...

முன்னெடுக்கவேண்டும் என்றும் விடுதலைப்புலிகளிடம் தன்னாட்சி அதிகாரசபையைக் கையளிக்க வேண்டும் என வற்புறுத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிதார். (01)

### நடேசன்...

மற்றும் வெளியூருக்கான போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை. தனியார் கல்வி நிறுவனங்கள், அரசாங்க பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

உள்ளூர் கிராமிய சங்கங்கள், நகர பொதுச்சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இதனால் திருகோணமலை மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. பிரதான நகரிலும் பொது இடங்களிலும் வீதிகளிலும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப் பட்டன.

மாவட்டத்தின் பொது இடங்கள் நகரின் மையப்பகுதியிலும் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம் பெறாத வகையில் பெருமளவிலான இராணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.(10,04)

INFORMATION TECHNOLOGY PARK
Kandy Road, Jaffna, Sri Lanka
Phone: Office: 021 222 3643 , 021 222 3641

முக்கிய அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணங்களினால் எமது நிறுவனத்தின் கிளைகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கிளை நிறுவனங்களில் ஜூன் மாதத்திற்கான பிரிவுகளைத் தொடங்க முடியாதுள்ளதால் விண்ணப்பப் படிவங்களைப் பெற்ற மாணவர்கள் 14-06-04 இற்கு முன்னதாக தலைமையகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இதனால் ஏற்பட்ட சிரமங்களிற்கு வருந்துகின்றோம்.

சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் யாவும் 12-06-04 இல் தலைமையகத்தில் ஆரம்பிக்க உள்ளது. மாணவர்கள் தங்கள் அனுமதியினை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

-நிர்வாகம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.